# உதயன்

சுடர் : 36 | கதிர் : 190 | வெள்ளிக்கிழமை | வைகாசி 20 ஆம் நாள் 04 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## இலங்கையில் மனித உரிமை மீறல்கள்

# அமெ. தீர்மானத்துக்கு இலங்கை போர்க்கொடி

### விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலாம்

கொழும்பு, ஜூன் 4

இலங்கையின் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இலங்கை அரசு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களான பில் ஜோன்சன், டேனி கே.டேவிஸ், பிரெட் ஷெர்மன், கேத்தி மெனிங் மற்றும் டெபோரா கே.ரோஸ் ஆகியோர் இணைந்து இலங்கை தொடர்பான தீர்மானமொன்றை தயாரித்து வெளியுறவுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளதுடன், அதனைத் தொடர்ந்து அந்தத் தீர்மானம் செனட் சபையில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்க ஏற்பாடாகியுள்ளது. 15 ➤

## கொரோனா இறப்பு 42

கொழும்பு, ஜூன் 4

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 42 பேர் உயிரிழந்துள்ளனர். அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு இதனைத் தெரிவித்துள்ளது. 15 ➤

## 5,000 ரூபா கேட்டு பொதுமக்கள் போர்

கொழும்பு, ஜூன் 4

5 ஆயிரம் ரூபா தருமாறுகோரி பொதுமக்கள் சிலர் நேற்றுப் போராட்டம் நடத்தியுள்ளனர். அராலி மத்திப் பகுதியிலேயே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்; நாங்கள் அன்றாடம் வேலைக்கு சென்று உழைத்துச் சாப்பிடும் 15 ➤




## யாழ்ப்பாணத்தில் 49,280 பேருக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை வரையில் 49 ஆயிரத்து 280 தடுப்பூசிகள் பொது 15 ➤

## பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர் சடலமாக உறவினரிடம் ஒப்படைப்பு!

*தாக்குதல் நடத்தியமையே காரணம் என்று குற்றச்சாட்டு*

மட்டக்களப்பு, ஜூன் 4

மட்டக்களப்பு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டவர் நேற்று சடலமாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். இளைஞனின் இறப்புக்கு அவர் ஐஸ் போதைப்பொருளை உட்கொண்டமையே காரணம் என்று மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 15 ➤



## அராலி தெற்கில் வெடிகுண்டுகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 4

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி தெற்குப் பகுதியிலிருந்து வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், அராலி தெற்கைச் சேர்ந்த நபரொருவர், நேற்றுத் தனது காணியைச் சுத்தம்செய்துள்ளார். இதன்போது அவரது காணியில் உள்ள கிணற்றில் 15 ➤

## கந்தரோடையில் ஆயுதமுனையில் பெருமளவு நகைகள் கொள்ளை!

### சந்தேகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 4

பயணக் கட்டுப்பாட்டில் யாழ். குடாநாடு முடங்கிக்கிடக்கும் நிலையில் கந்தரோடை பகுதியில் நேற்று அதிகாலை, பெருமளவான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. முகங்களைத் துணிகளால் முழுமையாக மறைத்தவாறு கோடாரி, கத்திகளுடன் வீடொன்றுக்குள் உள்நுழைந்த 15 ➤

## இணுவிலின் ஒரு பகுதி தனிமைப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 4

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இணுவில் கிராமத்தின் ஒரு பகுதி (ஜே/190) நேற்றுத் தனிமைப்படுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே அதிகளவில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட மூன்று கிராமங் 15 ➤

## பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குக

*ஜனாதிபதிக்கு மருத்துவ சங்கம் கடிதம்*

கொழும்பு, ஜூன் 4

இலங்கையில் நாளாந்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்த 15 ➤

### நாள்தோறும் தொற்றாளர் உச்சம்;

## நேற்று 3,264 பேருக்கு கொரோனாத் தொற்று!

கொழும்பு, ஜூன் 4

நாட்டில் நேற்றும் 3 ஆயிரத்து 264 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 15 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வாமை இருப்போருக்கு நாளை தடுப்பூசி ஏற்றல்!

## உரிய மருத்துவமனைகளில் பெறுமாறு வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்தல்



**யாழ்ப்பாணம், ஜூன் 4**

**சைனோஃபோர் தடுப்பூசிகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் மிகமிக அரிதாகும். எனினும், சிலவகை மருந்துகள், ஊசி மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்களுக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள யாழ். போதனா மருத்துவமனை மற்றும் சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்துறை மற்றும் பருத்தித்துறை ஆகிய ஆதார மருத்துவமனைகளில் நாளை சனிக்கிழமை தடுப்பூசிகள் பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிபாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

இலங்கையில் தொற்று அதிகம் எனத் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடங்குவதால், முன்னிலை அடிப்படையில் 50 ஆயிரம் சைனோஃபோர் தடுப்பூசிகள் முதற்கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வாமை நிலைமைகள் இருக்கின்றன என சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள், தமது பிரதேசத்துக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியைப் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும். - என்று பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (த-26)

---

### 5,000 ரூபா கொடுப்பனவு

# மூன்று தரப்பினருக்கே முன்னுரிமை வழங்கப்படும்

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவு மற்றும் சிறப்புத் தேவையுடையோர் கொடுப்பனவு பெறுவோருக்கே, தற்போது 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு இடர்கால நிதியாக அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுக் காலையிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த பிரிவினர் தவிர, ஏனைய பிரிவினருக்கு அடுத்த கட்டமாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. எனவே பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறுபட்ட இடங்களில் மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும், பொதுமக்கள் அவ்வாறு குழப்படையத் தேவையில்லை.

**500 தடுப்பூசிகள் மருத்துவமனைகளில்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டில், முதற்கட்டமாக எமக்கு கிடைத்த 50 ஆயிரம் தடுப்பூசிகளில் அனைத்து தடுப்பூசிகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளன. உயர் ஒவ்வாமை போன்ற காரணங்களுக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோருக்கு வழங்கவென 500 தடுப்பூசிகள் பிரதேச மருத்துவமனைகளுக்கும் போதனா மருத்துவமனைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனைவிட சுமார் ஆயிரத்து 600 தடுப்பூசிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் கல்விசாரா அலுவலர்களுக்குமென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினரின் கணக்கின்படி யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மேலும் மூன்று லட்சத்துக்கும் அதிகமான தடுப்பூசிகள் தேவையாகவுள்ளன. எனினும், அரசு எவ்வளவு தடுப்பூசி வழங்குகின்றதோ அவற்றை உடனடியாக பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (த-20)

---

# யாழ். போதனா மருத்துவமனையில் திருடப்பட்ட அலைபேசிகள் மீட்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 7 பெறுமதியான தொலைபேசிகள் திருடப்பட்டிருந்த நிலையில், சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 7 தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

7 தொலைபேசிகளில் 2 தொலைபேசிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏனைய ஐந்து தொலைபேசிகளையும் அடையாளம் கண்டு உரியவர்களிடம் ஒப்படைக்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவை தொடர்பு கொண்டு தொலைபேசிகள் அடையாளம் காட்டமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-20)

---

# வவுனியா வளாக பணியாளர்களுக்கு இன்று தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் மற்றும் கனகராயன்குளத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த விவசாயப் பண்ணை ஆகியவற்றின் பணியாளர்களுக்கு இன்று கொவிட்-19 தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

வவுனியா வளாக மருத்துவ அதிகாரி ப. சத்தியலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், வவுனியா மருத்துவமனையில் வைத்து இன்று முற்பகல் 9 மணி முதல் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

---

# இராஜாங்க அமைச்சுக்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்வு

இராஜாங்க அமைச்சுக்களின் முன்னேற்றம் குறித்து, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மாதாந்த சந்திப்பின்போது, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கேட்டறிந்தார்.

ஒவ்வோர் இராஜாங்க அமைச்சுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள், இலக்குகள் நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பிலும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும், இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு விளக்கினர்.

கொவிட் நோய்த்தொற்றுக்கு மத்தியில், தமது அமைச்சுக்கள் மக்களுக்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை பொருளாதார பாதுகாப்புக்கு முதலிடம் அளித்து, முன்கொண்டு செல்வதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர். (த-இ)

---

# சேதனப் பசளை உற்பத்தியை துரிதப்படுத்த கோத்தா பணிப்பு



கொழும்பு, ஜூன் 4

பெரும்போகத்துக்குத் தேவையான சேதனப் பசளையை உற்பத்திசெய்வதை துரிதப்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

உர உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள் எவை என்பது தொடர்பாக ஆராய்ந்து, அவற்றை இறக்குமதிசெய்வதற்கும் உள்நாட்டில் தயாரிக்க முடியுமான இயந்திரங்களை அரசுக்கு சொந்தமான தொழிற்சாலைகளிலும் இராணுவத்தின் பொறியியல் படைப் பிரிவின் பங்களிப்புடனும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.

உர உற்பத்தியை உள்ளூராட்சி நிறுவனங்களின் மட்டத்தில் மேற்கொள்வது குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. அந்த நிறுவனங்களுக்கு தொழிநுட்ப அறிவை வழங்க வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார். சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களை கிராமிய சூழலிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம் கிராமங்களின் தூய்மையையும் அழகையும் பேண முடியும் என்பதுடன், சமுர்த்தி உதவி பெறுநர்களை இதற்கு பங்களிக்கச்செய்வதன் மூலம், புதிய கிராமிய பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப முடியும் - என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (த-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மத குருமார்களுக்கும் ரூ.5,000 கொடுப்பனவு



கொழும்பு, ஜூன் 4
நடைமுறையிலுள்ள பயணத்தடை காரணமாக வருமானம் இழந்த இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மத குருமாரின் வருமானத்தில் தங்கி வாழ்கின்ற குடும்பங்களுக்கு, 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

பிரதமரும், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கமைவாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதற்கமைவாக கிராம அலுவலர்களிடமிருந்து குருமார்கள் தங்களது அடையாள அட்டையை அல்லது ஆலய அறங்காவலரிடம் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்து, இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே வருமானம் இழந்துள்ள குருமார்கள் உரிய கிராம அலுவலரைத் தொடர்புகொண்டு உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ளுமாறு இந்துமத அலுவல்களுக்கான இணைப்புச்செயலார் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா தெரிவித்துள்ளார். (எ-4)




# கர்ப்பிணிகளுக்கு சைனோ.'.போர்ம் தடுப்பூசி ஏற்றலாம்

**கொழும்பு, ஜூன் 4**
**கர்ப்பிணிகளுக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசி உகந்தது என்று சுகாதார அமைச்சின் நோய்களுக்கான ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

ஏனைய தடுப்பூசிகள் குறித்து போதுமான தகவல்கள் இல்லாததால், கர்ப்பிணிகளுக்குசைனோஃபோர்ம் தடுப்பூசிகள் மட்டுமே வழங்கப்படும் என்று குழு பரிந்துரைத்துள்ளது.

ஆனாலும் இதனை வழங்குவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். குடும்பநல சுகாதார மேம்பாட்டு பணியகம் இது தொடர்பான நடைமுறைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது எனவும் ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை, சில கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சுகாதார அமைச்சின் முறையான ஒப்புதல் இல்லாமல் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என முறைப்பாடு கள் தனக்கு கிடைத்துள்ளன எனவும் அவர் கூறினார். (ஒ,5,இ)

## கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி தயாராகிறது சுற்றறிக்கை

கொழும்பு, ஜூன் 4
கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் சுற்றறிக்கை தயார்ப்படுத்தப்படுகின்றது என்று விசேட மருத்துவர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கர்ப்பிணிகளுக்கு உடல் நிலைமையில் பாதிப்புக்கள் இருப்பின், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கர்ப்பிணிகள் அவசரப்பட்டு, மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டாம். அதற்கான அறிவிப்பு அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## அஸ்ராஜெனகாவின் ஓர் டோஸ் போதுமா?

### ஆய்வை தொடங்கியது சிறிஜெயவர்தனபுர பல்கலை

கொழும்பு, ஜூன் 4
அஸ்ராஜெனகா தடுப்பூசியின் ஒரு டோஸ் மாத்திரம் கொரோனாவுக்கான எதிர்ப்பு சக்தியின் அளவை உடம்பில் அதிகரிக்குமா என்பது தொடர்பில் சிறிஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆய்வைத் தொடங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவு இயக்குநர் மருத்துவர் சந்திம ஜீவந்தரா மற்றும் அவரது குழுவினர் இது தொடர்பான ஆய்வை ஆரம்பித்துள்ளனர். (ஒ,5,இ)


யாழ்ப்பாணம்


கிளிநொச்சி


முல்லைத்தீவு


வவுனியா


பருத்தித்துறை

# வடக்கு, கிழக்கில் சுகாதாரத்துறையினர் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
கொரோனாத் தடுப்பூசியை சுகாதாரத் துறையினரின் குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மருத்துவமனைகளில் சுகாதாரத் துறைப் பணியாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் உள்ளிட்ட 20 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். நேற்றுக்காலை 7 மணி முதல் மதியம் 12 மணி வரையில் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர். ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர். கொரோனாவுக்கு முதலில் சாவடைவது நாங்களா?, சுகாதாரத்துறை குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றுங்கள், பயணத் தடை காலத்தில் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி தாருங்கள், என்.95 முகக்கவசம் வழங்குங்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். (ஒ,9,18,19,26,214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா சிகிச்சை கட்டில்கள் 84% தொற்றாளர்களால் நிரம்பின

**கொழும்பு, ஜூன் 4**

**நாடு முழுவதும் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க 168 நிலையங்கள் உள்ளன. அவற்றில் உள்ள 29 ஆயிரத்து 844 கட்டில்களில் 25 ஆயிரம் கட்டில்களில் தற்போதும் தொற்றாளர்கள் உள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**



சுகாதார அமைச்சின் தகவல் தொடர்பு பணிப்பாளர் மருத்துவர் ஹேரத் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், நாட்டுத் தேவையானளவு ஒட்சிசன் சிலிண்டர்கள் உள்ளன.

அத்துடன் வரும் நாள்களில் ஒட்சிசன் சிலிண்டருடன் கப்பல் வரவுள்ளது. இது அனைத்து மருத்துவமனைகளுக்கும் விநியோகிக்கப் போதுமானதாக இருக்கும்.

மேலும் 29 ஆயிரத்து 844 கட்டில்களில் 25 ஆயிரம் கட்டில்களில் கொரோனாத் தொற்றாளர்கள் இருந்தாலும், அவர்கள் சிகிச்சை முடித்து வெளியேறுவதால் இந்தச் சிகிச்சை நிலையங்களில் தொடர்ந்தும் கட்டில்கள் போதுமானளவு இருக்கும்.

கொரோனாத் தொற்றாளர்களைக் கையாள்வதற்குத் தேவையான மருத்துவமனைகள் தற்போதுள்ளன. அதே போன்று சுகாதார ஊழியர்களுக்கும் பற்றாக்குறை இல்லை.

சுகாதார ஊழியர்களை ஆள்சேர்ப்பு செய்வது மிகக் குறுகிய காலத்தில் செய்யக் கூடிய பணி அல்ல. அவர்களுக்கு போதுமான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

தற்போதுள்ள சுகாதார ஊழியர்களை வைத்து நோயாளர்களைப் பராமரிக்க முடியும்- என்றார். (ஓ,5,இ)




## 12 மாவட்டங்களுக்கு அடுத்த வாரம் தடுப்பூசி

கொழும்பு, ஜூன் 4

நாட்டில் மேலும் 12 மாவட்டங்களில் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் சைனோஃபோர்ம் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நுவரெலியா, மாத்தளை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, புத்தளம், கேகாலை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், மொனராகலை மற்றும் பொல நறுவை ஆகிய மாவட்ட மக்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## தடுப்பூசி விற்பனையென பேஸ்புக்கில் பதிவிட்டவர் கைது

கொழும்பு, ஜூன் 4

கொரோனாத் தடுப்பூசி 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை என்று தனது பேஸ்புக்கில் பதிவிட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கலவான தபஸ்ஸரகந்த வித்தியாலயத்தில் சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைக் குழப்பும் வகையில், தேயிலை தொழிற்சாலை ஒன்றின் முகாமையாளர் ஒருவர் தனது முகநூல் பக்கத்தில் தடுப்பூசி விற்பனைக்கு என்று பதிவிட்டுள்ளார். அதனையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)




## தற்காலிகத் தீர்வை விடுத்து தடுப்பு நடவடிக்கையைத் தீவிரமாக்குங்கள்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து*

கொழும்பு, ஜூன் 4

கொரோனா பரவலைத் தடுப்பதற்கு தொற்று தடுப்பு நடவடிக்கையே சிறந்த தீர்வு. சகல மக்களுக்கும் விரைந்து தடுப்பூசி ஏற்றுவதற்கு அரசு கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று சமூகத்தில் வேகமாக பரவி வருகின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஏற்கனவே மருத்துவமனைகள் நிரம்பியுள்ளன.

சரியான தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளாவிட்டால் எதிர்வரும் நாள்களில் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க நேரிடும்.

மருத்துவமனைகளை அதிகரிப்பது இந்தப் பிரச்சினைக்கு குறுகியகாலத் தீர்வே. நாம் நீண்ட கால தீர்வில் கவனம் செலுத்தவேண்டும். தடுப்பூசி ஏற்றுவதுதான் அதற்குத் தீர்வு. அதனை ஊக்குவிக்க வேண்டும்.

தொற்று அறிகுறிகள் இல்லாதவர்களை வீடுகளில் வைத்துப் பராமரிக்கவேண்டும் என்று நாங்கள் பரிந்துரைத்திருந்தோம். இதனைச் செயற்படுத்தாவிட்டால் சுகாதார ஊழியர்களின் பற்றாக்குறை பெரும் சவாலாக உருவெடுக்கும், என்றார் சொய்சா.

இலங்கையில் தற்போது 168 கொரோனா சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. 29 ஆயிரம் சாதாரண கட்டில்களும், 70 தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. (ஓ,5,இ)

## தொற்றாளர்களுக்கான போக்குவரத்து இடர்பாடு

கொழும்பு, ஜூன் 4

கொரோனாத் தொற்றாளர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்துவதில் பெரும் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று சுகாதார சேவைப் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொற்றாளர்களுக்கான போக்குவரத்து செயற்பாடுகளுக்கு தனியார் பஸ்கள் பயன்படுத்தப்படுவதில்லை. இலங்கை போக்குவரத்து அதிகார சபைக்குச் சொந்தமான பஸ்களே பயன்படுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் தொற்றாளர்கள் அதிகரிப்பதால், அவர்களை மருத்துவமனைகள் மற்றும் இடைத்தங்கல் நிலையங்களில் சேர்ப்பதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் இடர்பாடுகள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# தடுப்பூசிக் கொள்வனவுக்கு தனியாரை அனுமதியோம்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் மட்டுமே தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய முடியும். மாறாக தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க முடியாது என்று இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் மொத்த சனத்தொகையில் 20 வயதுக்கு மேற்பட்டோர் 145 லட்சம் பேர் இருக்கின்றனர். இவர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு கொவிட் தடுப்பூசிகளை ஏற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றுவதற்குத்



தேவையான நடவடிக்கைகள் கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டன. 5 லட்சம் கொவிட்ஷீல்ட் தடுப்பூசிகள் கடந்த வருடம் ஜனவரி மாதம் நாட்டுக்குக் கிடைத்தன. அதற்கமைவாக எந்தவொரு நாட்டிலும் தடுப்பூசி அல்லது மருந்துகளை விநியோகிப்பதற்கு அரச நிறுவனங்களுக்கு மாத்திரமே அனுமதி உண்டு.

அதேவேளை தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றிக் கொண்டவர்களுக்கு, அதன் இரண்டாவது டோஸ் ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். 13 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. அவற்றில் ஐந்து மில்லியன் தடுப்பூசிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிடைக்கவுள்ளன. மேலும் ஐந்து மில்லியன் தடுப்பூசிகள் எதிர்வரும் புதன்கிழமை கிடைக்கும்- என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருக்காக இது யாருக்காக?

மாகாண சபை அதிகாரங்களுக்கு உட்பட்ட திணைக்களங்கள் அனைத்தும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. விசேட வர்த்தமானியூடாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, இனி மாகாண சபைகளுக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் பயணத்தடைக் காலத்தில் இயங்க வேண்டும். அதே நேரம் தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்கள் என்பவற்றை முன்னெடுக்க முடியாது.

தற்போது கேள்வி என்னவென்றால் இந்தப் பயணத் தடையென்பது யாருக்கானது? என்பதே. 'கொரோனா கட்டுக்குள் உள்ளது. எனவே நாடு ஒருபோதும் முடக்கப்படாது' என்று அதிகாரத் தரப்பு சொல்லிவந்தது. நாட்டை முடக்குமாறு துறைசார் வல்லுநர்கள் கேட்டுக்கொண்ட பின்னரும் அரசு தன்னிலை தளரவில்லை. நீண்ட இழுபறியின் பின்னர் நாட்டை முடக்காது 'பயணத் தடையை' (?) விதித்தது. பயணத்தடை விதிக்கப்பட்ட போதிலும் ஏகப்பட்ட துறையினருக்கு 'தடை விலக்கும்' வழங்கியது. தற்போது மாகாண சபைகளுக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்களங்களையும் அத்தியாவசியத் தேவை என்று அறிவித்துள்ளது. ஆக, அத்தனை துறையினருக்கும் இனி பயணத்தடை என்பது விலக்கானது. அவர்கள் தாரளமாக வீதிகளில் பயணிக்கலாம்.

மீனவர்களுக்கும், மீன் விற்பனையாளர்களுக்கும் தடை விலக்கு வழங்கப்பட்டுள்ளது, விவசாயிகளுக்குத் தடை விலக்கு வழங்கப்பட்டுள்ளது, இன்ன பல தனியார் துறையினருக்குத் தடை விலக்கு வழங்கப்பட்டுள்ளது, மருத்துவத் துறையினருக்கும், சுகாதாரத்துறையினருக்கும் தடை விலக்கு வழங்கப்பட்டுள்ளது, இந்த நீட்சியான பட்டியலில் தற்போது மாகாண சபைகளின் அதிகாரத்துக்கு உட்பட்ட திணைக்களங்களுக்குத் தடை விலக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்படியாயின் யாருக்கு இந்த 'பயணத்தடை'.

அரச, தனியார் வேலைகளுக்குச் செல்லாமல் அன்றாடம் உழைத்து உண்ணும் அடித்தட்டு மக்களுக்கும், பணிகளில் இருந்து ஓய்வுபெற்றவர்களுக்கும், மாணவர்களுக்கும்தான் இந்தப் பயணத்தடையா?. இத்தகைய வகையறாவுக்குள் அடங்குகின்றவர்கள்தான் கொரோனாப் பெருந்தொற்றுக்கு உட்படுகின்றனரா?

ஆக, பயணத்தடை என்ற பெயரில் நாடு மீண்டும் இயல்புநிலைக்கு வந்துள்ளது. நாட்டை முடக்குமாறு விடுக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாக பயணத்தடை என்ற பெயரில் ஒரு 'சுத்துமாத்தை' அரங்கேற்றியவர்கள், மீண்டும் பழைய நிலைக்கே அதாவது இந்தப் பயணத்தடைகள் எங்கு ஆரம்பித்தனவோ அந்த இடத்துக்கே நாட்டைக் கொண்டு சென்றுள்ளனர் என்பது அப்பட்டமாகின்றது.

இலங்கையில் குறைந்தபட்சம் கொரோனாக் கொத்தணிகள்கூட இன்னும் முழுமையாக அவதானிக்கப்படவில்லை என்பது அரசுமீது பூதாகரமாக முன்வைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சமீபத்திய குற்றச்சாட்டு. இவ்வாறிருக்கையில் இந்தத் தடை விலக்கல்கள் நாட்டை இன்னுமின்னும் அதலபாதாளத்துக்குள்தான் கொண்டுசென்று விடப் போகின்றன என்பது மட்டும் உண்மை. கொரானாத் தொற்றுக்கள் கைமீறிச் சென்றதன் பின்னர் பயணத்தடை என்ற பெயரில் ஒரு சமாளிப்பைச் செய்ததுபோல விரைவில் இன்னுமொரு சமாளிப்பை ஏதேனும் வடிவத்தில் அரசு செய்ய வேண்டி வரலாம் வரும்!.




# சுற்றுலாவிகளால் மீண்டும் ஆபத்து

### சிரேஷ்ட பேராசிரியர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 4**

**வேகமாகப் பரவக்கூடிய கொரோனா வைரஸ் இனங்காணப்பட்ட நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதை நிறுத்த வேண்டும். இல்லையெனில் நாட்டில் ஏற்படப்போகும் மிகப்பெரும் ஆபத்தைத் தடுக்க முடியாது.**

இவ்வாறு சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன த சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 14 நாள்களாக மூடப்பட்டிருந்த விமான நிலையங்கள் மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவில் இருந்து இலங்கை வருவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தென்னாபிரிக்காவில் மிக வேகமாகப் பரவக்கூடிய வைரஸ் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை அரசால் எடுக்கப்பட்டுள்ள முடிவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்- என்றார். (எ-4)

## இலங்கைக்கு அமெரிக்கா அவசர மருத்துவ உதவி

கொழும்பு, ஜூன் 4

அமெரிக்கா, சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவனம் மூலம், மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு அவசர மருத்துவப் பொருள்களை விமானம் மூலம் அனுப்பியுள்ளது.

இலங்கைக்கு சுகாதார ஊழியர்கள் மற்றும் கொரோனாத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் துடிப்பு ஒக்சிமீற்றர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யு.எஸ்.எயிட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அமெரிக்காவும், இலங்கையும் நெருக்கமாக இணைந்து பணியாற்றியுள்ளன. இதன் மூலம் இலங்கை முழுவதும் உள்ள 25 மாவட்டங்கள் மற்றும் ஒன்பது மாகாணங்களில் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள உதவிகள், உயிர் காக்கும் சிகிச்சைகள் மற்றும் மருத்துவக் கவனிப்பை வலுப்படுத்தும்.

ஏற்கனவே இலங்கையின் கொரோனா மீட்பில் உதவுவதற்காக அமெரிக்க அரசு பல உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதில் மோசமாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ள நோயாளிகளைப் பராமரிப்பதற்காக 200 செயற்கை சுவாசக்கருவிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன - என்றுள்ளது. (எ-4)

# பயணத்தடைக் காலத்தில் சிறுவர்கள் அவதானம்

### விசேட மருத்துவர் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 4

தற்போது நடைமுறையிலுள்ள பயணத் தடைக் காலத்தில் சிறுவர்கள் தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவர் தீபால் பெரேரா ஆலோசனை தெரிவித்துள்ளார்.

மரக்கறி, பழ வகைகள் மற்றும் உணவுப் பொருள்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் வாகனங்கள் வீட்டுக்கு அருகில் வருகைதரும்போது, அந்த வாகனங்களுக்கு அருகில் சிறுவர்கள் செல்வதற்கு இடமளிக்க வேண்டாம்.

பெரியவர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ததன் பின்னர், உடனடியாக வீட்டுக்குள் அவற்றைக் கொண்டுசெல்ல வேண்டாம். வீட்டுக்கு வெளியிலேயே வைத்து, அவற்றைக் கழுவிய பின்னர் வீட்டுக்குள் கொண்டு செல்லவும்.

அதேவேளை வெளியில் நடமாடும்போது 2 வயது முதல் 15 வயது வரையான சிறுவர்களுக்கும் கட்டாயம் முகக்கவசத்தை அணியவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழங்கப்பட்ட 50 ஆயிரம் தடுப்பூசிகள் மாகாணத்துக்கா? மாவட்டத்துக்கா?

## பகிரங்கப்படுத்துமாறு வினோ எம்.பி. கோரிக்கை

**மன்னார்,ஜூன் 4**

**வடக்கு மாகாணத்துக்கென ஒதுக்கப்பட்ட ஐம்பதாயிரம் கொவிட் தடுப்பூசிகளும் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் வழங்கப்பட்டு வன்னி மாவட்டம் முற்றாக புறக்கணிக்கப்பட்டது எதற்காக? என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**



இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐம்பதாயிரம் கொவிட் தடுப்பூசிகளும் அரசாங்கத்தின் அறிவிப்பின் படி ஆரம்பத்தில் வட மாகாண மக்களுக்கென தெரிவிக்கப்பட்டது. பின்னர் அது யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு செலுத்தி முடிக்கப் பட்டது. யாழ்.மாவட்ட மக்களிடம் கொவிட் தொற்றின் பரவல் காணப்படுவது போலவே வன்னியிலும் தீவிர பரவல் காணப்படுகின்றது.

வட மாகாணம் என்பது யாழ்ப்பாண மாவட்டம் என்பதாக வட மாகாண சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளும், அரச உயர் அதிகாரிகளும், அரச தரப்பின் யாழ் அரசியல் தலைமைகளும் எண்ணம் கொண்டிருப்பது தவறான முன்னுதாரணமாகும்.

ஐம்பதாயிரம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளில் குறிப்பிட்ட அளவை யாவது வன்னி மாவட்ட மக்களுக்கும் செலுத்தி கொவிட் பரவலை கட்டுப்படுத்தத் தவறுவது, அல்லது அக்கறை கொண்டிருக்காமை வன்னி மக்களுக்கு செய்கின்ற துரோகமாகும்.

வவுனியாவிலும், மன்னாரிலும் உயிரிழப்புகளும், தொற்றும் அதிகரித்தே செல்கின்றன. அதே போல் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலைக் கொத்தணி பல நூற்றுக் கணக்கான தொற்றாளர்களை அடையாளம் கண்டது.

பல கிராமங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமைக்கு ஆடைத்தொழிற்சாலைக் கொத்தணியே காரணமாகும்.

எனவே வன்னி மாவட்டம் தடுப்பூசி வழங்கலில் புறக்கணிக்கப்படுவது அல்லது ஏமாற்றப்படுவது ஏன் என்பதை அதிகாரிகளும், அரசாங்கமும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் - என்றார். (ஐ-56)



# 95 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

**கிளிநொச்சி,ஜூன் 4**

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி இந்திராபுரம் கிராமத்தைச் சேர்ந்த 95 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சுவிஸ் நாட்டில் வசிக்கும் நலன்விரும்பி ஒருவரின் மகனின் முதலாவது பிறந்நாளை முன்னிட்டு தாய்மடி அமைப்பின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இதன்போது பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர் கஜன் மற்றும் உறுப்பினர்களான ரமேஷ், வீரவாகுதேவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பயனாளிகளிடம் பொருள்களை கையளித்தனர். (ஐ-13)

# 150 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள்

**கொடிகாமம், ஜூன் 4**

பயணத்தடை காரணமாக வருமானத்தை இழந்து பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மீசாலை கிழக்கு, கொட்டாம்பிட்டி, உப்புகேணி வீதி, பெரியமாவடி சித்தி விநாயகர் கலைமன்றத்தடி, கல்வயல், சோலையம்மன் கோவிலடி, கெற்பேலி, கச்சாய் துறைமுகத்தடி மற்றும் மண்டுவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பக்களுக்கே உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் வீ.விஜயேந்திரனின் ஏற்பாட்டில் கனடாவில் வசிக்கும் ரவீந்திரன் திலகவதி குடும்பத்தினரால் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பொருள்களை பயனாளிகளிடம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கையளித்தார். (ஐ-159)




### பயணத்தடையின்போது

# வெளியில் நடமாடிய 150 பேருக்கு பி.சி.ஆர்.

**மன்னார்,ஜூன் 4**

பயணத்தடையின்போது வெளியில் நடமாடிய 150 பேருக்கு மேற்பட்டோருக்கு பி.சி.ஆர். பரிசோதனை நேற்று நானாட்டான் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டது. நானாட்டான் சுகாதார மருத்துவப் பிரிவு மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று திடீர் சுற்றிவளைப்பு ஒன்றை மேற்கொண்டனர். இதன்போது பயணத்தடையையும் பொருட்படுத்தாது வெளியில் உலாவித் திரிந்தவர்கள், வேலை நிமிர்த்தம் சென்ற அரச அலுவலர்கள், வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் என்று 150 க்கும் மேற்பட்டவர்கள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு நானாட்டான் பஸ் நிலையத்தில் வைத்து நேற்று பி.சி. ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஐ-213)




# தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு ஒரு தொகுதி பொருள்கள் கையளிப்பு

**மன்னார்,ஜூன் 4**

கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி உதவிப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெலின் வேண்டுகோளுக்கு அமைவாக எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தினரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

சவர்க்காரம், ஷாம்பூ, செருப்பு மற்றும் சுகாதார பொருள்கள் என்பவை உள்ளடங்கிய ஒரு தொகுதிப் பொருள்கள் நிறுவனத்தினரால் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-213)





# மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வவுனியாவில் களமிறங்கியது இராணுவம்

வவுனியா நகரப் பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டதை அடுத்து, அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர். வவுனியா நகரின் பிரதான சந்திகள், உள் வீதிகளின் சந்திகள் என்பவற்றில் சிறப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர், வீதிகளில் செல்லும் மக்களை மறித்து கடுமையான எச்சரிக்கை செய்து வீடுகளுக்கு திருப்பி அனுப்பினர். அத்துடன் நகரின் சில பகுதிகளில் இராணுவத்தினருடன் இணைந்து கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தேவையற்ற வகையில் பயணத்தடையை மீறி நகரில் நடமாடுவோரை வழிமறித்து அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளையும் பதிவு செய்தனர். (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறி உப்பைக் கொள்வனவுசெய்ய மன்னாரில் முண்டியடித்த மக்கள்

மன்னார்,ஜூன் 4

நாட்டில் உப்புக்கு தட்டுப்பாடுஏற்படலாம்என்று வெளியான செய்தியைத் தொடர்ந்து, மன்னாரில் உள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தில் நேற்று கறி உப்பை கொள்வனவுசெய்ய மக்கள் முண்டியடித்தனர்.





கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் உள்ள கடலில் தீப்பிடித்த கப்பலால், கடலில் இரசாயன பொருள்கள் கலந்துள்ளமையால் நாட்டில் உப்பு உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

இதனையடுத்து மன்னாரில் உள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தில் நேற்றுக் காலை முதல் பொதி செய்யப்பட்ட அயடின் கலந்த உப்பு பைக்கற்றுக்களை கொள்வனவு செய்ய மக்கள் முண்டியடித்ததுடன், மக்கள் தமக்கு தேவையான உப்பு பைக்கற்றுக்களையும் கொள்வனவு செய்து சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தின் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்:

"மன்னார் மாவட்ட மக்களுக்கு தேவையான உப்பு போதிய அளவு உள்ளது. மக்கள் இவ்வாறு முண்டியடித்ததைக்கொண்டு உப்பைக் கொள்வனவுசெய்ய வேண்டிய தேவை இல்லை. தற்போது அதிக அளவு உப்பு கையிருப்பில் உள்ளதோடு, பெரும் போக உப்பு உற்பத்தியும் தற்போது இடம்பெற்று வருகிறது - என்றார். (ஐ-56)



## கட்டாக்காலி நாய்களுக்கு உணவு வழங்கிய பொலிஸார்

மன்னார்,ஜூன் 4

மன்னார் மாவட்டத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களுக்கு பொலிஸாரால் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்ட மூத்த பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டுல்லவீரசிங்கவின் எண்ணக்கருவில் மன்னார் மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் அனைவரும் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

பயணக் கட்டுப்பாடு காரணமாக கடைகள் அடைப்பால் உணவு இன்றி தவித்து வருகின்ற கட்டாக்காலி நாய்களுக்கே நேற்றைய தினம் உணவு வழங்கப்பட்டது. (ஐ-213)

## இம்மாதக் கொடுப்பனவு நேற்று முதல் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூன் 4

தென்மராட்சி பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவித் தொகை பெறுவோருக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நேற்று தொடக்கம் கொடுப்பனவுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. உதவித்தொகை பெறுவோர் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



## தனிமையிலுள்ள குடும்பங்களுக்கு மீன் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வரும் 70 மீனவர்கள் தமக்கு கிடைத்த மீனில் தலா ஒரு கிலோவை தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு வழங்கினர்.

கிளிநொச்சி சாந்தபுரத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு இந்த மீன்கள் வழங்கப்பட்டன.

70 மீனவர்களும் ஒரு கிலோ வீதம் 70 கிலோ மீனை 70 குடும்பங்களுக்கு வழங்கினர்.

தொடர்ந்தும் பயணத்தடை நடைமுறையில் உள்ள காலப்பகுதி வரை இச் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளோம் என மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-113)



## 'விடுமுறை இல்லம்' திறப்பு

கொடிகாமம்,ஜூன் 4

எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் உள்ள யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்துக்கு சொந்தமான நுங்குவில் தோட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 'விடுமுறை இல்லம்' நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

இவ் இல்லம் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசத்தால் ஆசீர்வதிக்கப்பட்டு நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழா நிகழ்வை நினைவுகூரும் முகமாக மரக்கன்றுகளும் நடுகைசெய்யப்பட்டன.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ மதகுருமார்களின் பங்குபற்றுதலோடு குறித்த நிகழ்வு நடைபெற்றது. (ஐ-20)



## திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த வீதிகளில் சுற்றுக்காவலில் பொலிஸார்

யாழ்ப்பாணம்,ஜூன் 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக வீதிகளில் பொலிஸார் சுற்றுக்காவல் நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

பயணத் தடை நடைமுறையில் உள்ள வேளையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலையில், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய மோட்டார் சைக்கிள் அணியினர் மாலை வேளைகளில் வீதிகளில் சந்தேகத்துக்கு இடமாக பயணிப்போரை சோதனையிடுவதுடன், பயணிக்கும் வாகனங்களையும் பதிவுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது அத்தியாவசிய சேவை தவிர்ந்து தேவையற்ற விதத்தில் வீதியில் பயணித்தவர்களை வீடுகளுக்கு திருப்பி அனுப்பிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மூடப்பட்டிருந்த கடைகள், பாடசாலைகள் மற்றும் தேவாலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-20)

## பழையமுறிகண்டி கிராமத்தில் தொடரும் மணல் அகழ்வு

முல்லைத்தீவு -பழையமுறிகண்டி கிராமத்தில் நாள்தோறும் மணல் அகழப்பட்டு டிப்பர்களில் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது என்று அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பழையமுறிகண்டிக் கிராமத்தின் ஆற்றுப்படுகைகள் மற்றும் குளத்தின் பின்பகுதி என்பவற்றில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு தொடர்ந்தும் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோரிடம் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆற்றுப்படுகைகளில் தொடர்கின்ற மணல் அகழ்வால் பழையமுறிகண்டிக் குளத்தின் அணைக்கட்டுக்கு ஆபத்து இருக்கிறது என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். புத்துவெட்டுவான் கிராமத்தில் மணல் அகழ்வு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், பழையமுறிகண்டிக் கிராமத்தில் தொடர்ந்தும் மணல் அகழ்வு நடைபெறுகின்றது. இக் கிராமத்தில் அகழப்படும் மணல் புத்து வெட்டுவான், கொக்காவில் வழியாக வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது. துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இணைத் தலைவர்களும் அதிகாரிகளும் குறித்த மணல் அகழ்வு நடைபெறும் பகுதிகளைப் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என முடிவுகள் எடுக்கப்பட்ட போதும் இதுவரை குறித்த பகுதிகளை வந்து பார்வையிடவில்லை.

தென்னிலங்கையில் இருந்து மணல் அகழ்வுக்கான அனுமதிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் மணல் மற்றும் கிரவல் அகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பேர்ள் எக்ஸ்பிரஸ் கப்பலை

# ஆழ்கடலுக்குள் இழுத்துச்செல்ல முயன்றமை முட்டாள்தனமானது!

**கொழும்பு, ஜுன் 4**

**கப்பலில் 300 மெட்ரிக் தொன் எண்ணெய் இருக்கும் நிலையில் அதனை அகற்றாமல் ஆழ்கடலுக்கு இழுத்துச்செல்லும் யோசனையை யார் வழங்கினார்கள் என்று கடல்சார் சட்டத்தரணியும், பேராசிரியருமான டான் மாலிக குணசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.**

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் தீப்பிடித்து எரிந்தது. தீ அணைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச கடந்த முதலாம் திகதி, கப்பலை ஆழ் கடலுக்கு உடனடியாக இழுத்துச்செல்லுமாறு பணித்தார். இதற்கு அமைவாக நேற்றுமுன்தினம் கப்பலை ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்லும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனாலும் கப்பலின் ஒரு பகுதி கடலில் தரை முட்டி மூழ்கத் தொடங்கியதால் அந்தப் பணி இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பில் பேராசிரியர் டான் மாலிக குணசேகர தெரிவிக்கையில்;

தீப்பிடித்த கப்பல் குளிர்சியடைந்து சாதாரண நிலைமைக்கு திரும்பும் வரையில் காத்திருக்கவேண்டும். கப்பலில் இருந்து எண்ணெயை வெளியேற்றப்பட வேண்டும். தீப்பிடித்த கப்பலில் இருந்து எண்ணெயை அகற்ற குழாய் இணைக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக மெதுவான வேகத்தில் மாத்திரமே எண்ணெயை வெளியேற்ற முடியும். மேலும் நெதர்லாந்திலிருந்து வந்த விசாரணைக் குழு தனது விசாரணையின்போது முதலாம் திகதி மாலையில்கூட கப்பலில் இருந்து தண்ணீர் வருகிறது என தெரிவித்திருந்தது. இவ்வாறானதொரு சூழலில் கப்பலை ஆழ்கடலை நோக்கி இழுத்துச்செல்ல யார் ஆலோசனை வழங்கினார்கள்?

மேலும் கப்பலால் ஏற்பட்ட இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு சேதங்களை மதிப்பீடு செய்ய வேண்டும். இவ்வாறான அழிவுகள் தொடர்பான சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கு இலங்கையில் போது மான சட்ட ஏற்பாடுகள் இல்லை.

அதேவேளை, இரசாயனக் கசிவு காரணமாக கப்பல் இந்தியாவில் இருந்து பயணிக்க ஏற்றது அல்ல என்பதை கப்பல் உறுப்பினர்கள் அறிந்திருந்தும் பயணித்திருந்தால் அவர்கள் சட்டங்களை மீறியுள்ளனர்.

அத்துடன், கப்பல் தீ விபத்து ஏற்பட்டு நான்கு நாள்களுக்குப் பின்னரே இந்தியாவின் உதவியை இலங்கை கோரியது. இவ்வாறான தீ விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் இந்தியாவிடம் உள்ள நிலையில், தாமதமாக உதவி கோரியது ஏன் என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார்.

இதேவேளை துறைமுகங்கள் அமைச்சின் செயலர் ஜெயலால், எண்ணெய் பரவலால் இலங்கை கடற்பரப்பில் ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்காகவே கப்பலை உடனடியாக ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது எனக் குறிப்பிட்டார். அத்துடன் மே 20ஆம் திகதி கப்பலில் தீப் பிடித்திருந்தாலும் மே 24ஆம் திகதியே அது கட்டுப்படுத்த முடியாதளவுக்கு சவாலானதான மாறியது எனவும் அதன் பின்னர் இந்தியாவின் உதவி கோரிப் பெறப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் கப்பலின் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ.5.இ)

## கப்பலில் எண்ணெய் கசிந்தால் இயற்கைக்குப் பெரும் பாதிப்பு

*அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு*



கொழும்பு, ஜுன் 4

இலங்கைக் கடற்பரப்புக்குள் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டால் இயற்கைக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீப்பற்றிய கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் இலங்கை அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. இந்தக் கப்பலை நாட்டுக்குள் யார் அனுமதித்தார்கள் என்பது தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாதிருப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு ஆராய்ந்து வருகின்றது. இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய அனைவரும் நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

குறித்த கப்பல் நிறுவனத்தால் 100 பில்லியன் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டாலும், இதனால் சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை மீட்டெடுக்க முடியாது - என்றார். (எ-4)

## தனிமைப்படுத்தலின் பின்னரே மேயருக்கு எதிரான நடவடிக்கை

*பொலிஸ் பேச்சாளர் தகவல்*

கொழும்பு, ஜுன் 4

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி குருநாகல் பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்ற பிறந்த நாள் கொண்டாட்டம் தொடர்பில் மேயருக்கு எதிராக அவரது தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னரே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 30 திகதி, பயணத்தடைக் காலத்தில் குருநாகல் பொலிஸ் நிலையத்தில், குருநாகல் மேயர் துஷார சஞ்சீவவின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இதில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் கலந்துகொண்டிருந்தார். பிறந்தநாள் தொடர்பான காணொலிகள் ஊடகங்களில் வெளிவந்த பின்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இடமாற்றப்பட்டிருந்தார்.

மேயர் மற்றும் அவரது மனைவி உள்ளிட்ட சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களது தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னரே அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (ஒ.5.இ)

# அபாயகரமான இரசாயனங்களுடனேயே எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பயணித்தது

*தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக விவரங்கள் வெளியாகின*

அபாயகரமான இரசாயனப் பொருள்கள் உள்பட ஆயிரத்து 486 வகையான பொருள்களுடனேயே எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கிறது என சுற்றுச்சூழல் நீதிக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கப்பலில் உள்ள பொருள்களின் விவரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

நைட்ரிக் அமிலம், எத்தனோல், ஈயம், யூரியா, உயர் அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன், குறைந்த அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன் மற்றும் எபோக்சி ரெசின்கள் போன்ற அபாயகரமான இரசாயனங்கள் இந்தக் கப்பலில் இருந்தன. சோடியம் மெத்தாக்ஸைடு, அலுமினியம் தயாரிப்புகளை செய்லாக்குதல், அழகுசாதனப் பொருள்களுக்கான மூலப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்கள் ஆகியவையும் கப்பலில் இருந்துள்ளன என்று குறிப்பிட்டார். மொத்தமாக ஆயிரத்து 486 வகையான பொருள்கள் இருந்தன என அவர் கூறுகின்றார்.

'பொதுமக்களின் நன்மை கருதியும், நீர்கொழும்பு உள்ளிட்ட கடற்கரையில் கரையொதுங்கும் கப்பலின் இரசாயனப் பொருள்களை பொதுமக்கள் எடுத்துச் செல்வதைத் தடுக்கும் வகையிலுமே இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன' என அவர் தெரிவித்தார். (ஒ.5.இ)

# 584 தொன் பிளாஸ்டிக் கழிவுகள் கடலோரத்தில் இதுவரை மீட்பு!

கொழும்பு, ஜுன் 4

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்ததன் காரணமாக கப்பலில் இருந்து வெளியேறிய பிளாஸ்டிக் கழிவுகளில் 584 தொன் இதுவரை மீட்கப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

கடலோர பாதுகாப்பு அதிகார சபை, கடலோர பாதுகாப்பு திணைக்களம், கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து கடற்கரையோரத்தை துப்புரவுசெய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை 584 தொன் பிளாஸ்டிக் கழிவுகளை அவர்கள் சேகரித்துள்ளனர். இவை உரைப்பைகளில் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

இன்னமும் கழிவுகள் ஒதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)

# மீன்கள் மீதான ஆய்வு தொடரும்

இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால், மீன்களின் உடலில் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் கலந்துள்ளமை இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் ஆய்வுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்துள்ளார்.

கப்பல் தீப்பற்றிய கடற்பரப்பை அண்டிய பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன. அதனால் நுகர்வுக்குப் பொருத்தமற்ற மீன்கள் சந்தைக்குக் கொண்டுவரப்படாது.

பயணக் கட்டுப்பாடு விதித்திருந்தாலும் நடமாடும் வாகன வியாபாரிகளால் மீன் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. மக்கள் அச்சமின்றி மீன்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இலங்கையின் மீன்வளம் மற்றும் கடற்கரை உட்பட கடல் பகுதியின் நீண்டகால விளைவுகள் தொடர்பாக மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கடல்சார் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா வைரஸ் மிக ஆபத்தானது

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 4**

**இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா வைரஸின் மூன்று உப ரகங்களில், டெல்டா ரகம் மட்டும் மிகவும் ஆபத்தானது. இதன் பரவல் வேகம் மிக அதிகமாக உள்ளதால், கவலையளிக்கும் ரகமாக வகைப் படுத்தப்பட்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் இந்திய - மராட்டிய மாநிலத்தில் பி.1.617 என்ற உருமாறிய கொரோனா வைரஸ் முதன் முறையாக கண்டறியப்பட்டது. பின்னர் இது மூன்று உப ரகங்களாகப் பிரிக்கப்பட்டது. இவற்றில் பி.1.617.2 என்ற ரகத்துக்கு டெல்டா என்று பெயரிடப்பட்டது. பி.1.617.1 ரகத்துக்கு கப்பா என்றும் பெயரிடப்பட்டது.

இந்த மூன்று உப ரகங்களையும் கவலையளிக்கும் ரகம் என்று முன்னர் வகைப்படுத்தப்பட்டது. தற்போது இந்த மூன்று உப ரகங்களில், டெல்டா ரகம் மட்டுமே கவலையளிக்கும் ரகம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கப்பா உப ரக வைரஸின் பரவல் மிகக்குறைவாக உள்ளதால், அது கவனிக்கப்பட வேண்டிய ரகமாக வகைப்படுத்தப்பட்டுள் ளது. பி.1617.3 என்ற பெயரிடப்படாத மூன்றாவது உப ரக வைரஸ் மிக மிகக் குறைவாகவே கண்டறியப்பட்டுள்ளதால், அது எந்தப் பிரிவிலும் சேர்க்கப்படவில்லை. பல நாடுகளுக்குப் பரவியுள்ள இந்த டெல்டா ரக வைரஸ் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றுள்ளது. (எ-4)

## கொரோனாவுக்கு சிகிச்சை: போலி மருத்துவர்கள் கைது



கொழும்பு, ஜூன் 4

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் என்று கூறி சமூக வலைத்தளம் ஊடாக, பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், போலி மருத்துவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கேஸ்பாவ கஹபொலப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள தொற்றாளர்களை சமூக வலைத்தளம் ஊடாக, தொடர்புகொண்ட நபர்கள், அவர்களிடம் 12 ஆயிரத்து 500 ரூபாவைப் பெற்றுள்ளனர்.

கேஸ்பாவ சுகாதார மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் நடத்திய விசாரணையில் அவர்கள் மருத்துவர்கள் அல்ல என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இருவரும் கைதுசெய்யப்பட்டனர். (எ-4)

## ஒரே பஸ்ஸில் பயணித்த 18 பேருக்கு கொரோனா



கொழும்பு, ஜூன் 4

ஒரே பஸ்ஸில் பயணித்த 33 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஹப்புத்தளை பிட்டரத்மலே, தொடலாகல மற்றும் தபேதென்ன ஆகிய தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 18 பேருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பலாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் ஒரே பஸ்ஸில் ஹப்புத்தளையில் இருந்து பலாங்கொட பகுதிக்குப் பயணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## வெவ்வேறு நிறங்களில் வாகனங்களுக்கு ஸ்டிக்கர்

கொழும்பு, ஜூன் 4

அத்தியாவசிய தேவைகளுக்காகப் பயணிக்கும் வாகனங்களை இனங்கண்டுகொள்வதற்காக, பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்டிக்கர் முறை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வாகனங்கள் முதல் நாள் ஒட்டப்பட்ட ஸ்டிக்கருடன் மறுநாள் பயணிக்க முடியாது. அன்றைய தினம் பயணிக்கும் வாகனங்களுக்கு வேறு நிறத்தில் ஸ்டிக்கர் ஒட்டப்படும்.

கொழும்புக்குள் நுழையும் 52 இடங்களில் இவ்வாறு ஸ்டிக்கர் ஒட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ-4)



## ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்கள் அதிகரிப்பு




கொழும்பு, ஜூன் 4

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் கொரோனாத் தொற்றாளர்களில், ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று சுகாதாரத் தரப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த 5 தினங்களில் மாத்திரம் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை, 120 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கொவிட் இணைப்பு மத்திய நிலையத்தின் தரவுகளுக்கு அமைவாக இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி மருத்துவமனைகளில் ஒட்சிசன் வழங்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 149 ஆகக் காணப்பட்டது. அடுத்தடுத்த தினங்களில் அந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளது. அதற்கமைவாக கடந்த 28 ஆம் திகதி 230 நோயாளர்களுக்கும், 29 ஆம் திகதி 237 நோயாளர்களுக்கும், 30 ஆம் திகதி 310 நோயாளர்களுக்கும், 31 ஆம் திகதி 330 நோயாளர்களுக்கும் ஒட்சிசன் வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-4)

## 7 கர்ப்பிணிகள் கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 4

நாட்டில் இதுவரை 7 கர்ப்பிணிகள் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

களுபோவில மருத்துவமனையில் சிகிச்சைபெற்ற பெண் ஒருவரே இறுதியாக உயிரிழந்துள்ளார்.

அதேவேளை கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)



## அத்தியாவசிய சேவை வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 4

லங்கா சதொச, கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், மாகாண சபைக்கு உட்பட்ட மற்றும் சுகாதாரத் துறைக்குட்பட்ட அனைத்து சேவைகளும், அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ், ஜனாதிபதியால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன் கீழ் வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை மூலம் மேற்கொள்ளப்படும் சகல உணவுகள் மற்றும் குடிபானப்பொருள்கள் உள்ளிட்ட பொது மக்களுக்குத் தேவையான ஏனைய சகல நுகர்வுப்பொருள்களை வழங்குதல், களஞ்சியப்படுத்துதல், விநியோகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் ஆகியவை உள்ளிட்ட அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மாகாண சபைகளின் கீழுள்ள சகல அரச அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து சேவைகளும் அதிவிசேட வர்த்தமானி மூலம் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் சுகாதார சேவைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் அதிகாரியின் மனைவி கடத்தல்?

கொழும்பு, ஜூன் 4
கம்பஹா மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர், தனது மனைவி கடத்தப்பட்டுள்ளார் என்று கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

சி.ஐ.டி.யின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனது அதிகாரப்பூர்வ வாகனத்தில் கண்டி வீதியில் இரவு 9.45 மணியளவில் எனது மனைவியுடன் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சென்றுகொண்டிருந்தார்.

அவர்களைத் துரத்திச் சென்றபோது, கண்டி வீதியில் உள்ள தலுகம களனிய பகுதியில் உள்ள ஒரு தொழிலதிபரின் வீட்டுக்குள் நுழைந்தனர் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டை அடுத்து கிரிபத்கொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-4)

# கோதுமை மாவின் விலை அதிகரிப்பு



**கொழும்பு, ஜூன் 4**

**பிரீமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை சடுதியாக அதிகரித்துள்ளது.**

அதற்கமைய ரொட்டிக்கான கோதுமை மா ஒரு கிலோக்கிராம் 4 ரூபாவாலும், பிஸ்கட் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் கோதுமை மா ஒரு கிலோக்கிராம் 6 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பிரீமா நிறுவனத்தின் வர்த்தகப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

உலக சந்தையில் மா வகைகளின் விலை அதிகரித்தமையே உள்ளூரில் அவற்றின் விலையை அதிகரிக்கக் காரணம் என்று பிரீமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை விலை அதிகரிப்புக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், பிரீமா நிறுவனத்துக்கு அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்துள்ளார். (எ-4)

## மஹிந்தவின் இணையத்தளம்மீது சைபர் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 4
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் www.mahindarajapaksa.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளம்மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று இலங்கை தகவல் தொழில் நுட்ப சங்கம் தெரிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் இணையத்தள முகவரிக்குள் பிரவேசிக்கும் போது, வேறொரு முகவரிக்குப் பிரவேசிக்கும் வகையில் URL Redirect செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு URL Redirect செய்யப்பட்டுள்ள இணையத்தளத்தில் BITCOIN தொடர்பான தகவல்களே காணப்பட்டன. எனினும் அந்த இணையத்தளம் மீண்டும் வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் அந்நாட்டு மொழிகளுக்கு இடமில்லை

*அரசின் நிலைப்பாடு இதுதான் என்கிறார் ரத்னசிறி*



கொழும்பு, ஜூன் 4
இலங்கையில் வெளிநாட்டு நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு அந்த நாட்டின் மொழியைப் பயன்படுத்த முடியாது. இலங்கையில் உள்ள அரச மொழிக் கொள்கைக்கு அமைவாகவே செயற்படவேண்டும். இவ்வாறு பொதுச் சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:
வெளிநாட்டு நிதி உதவியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்குரிய நிதிகள் திறைசேரிக்கு வருகின்றன. அந்த நாட்டின் மொழிகளை திட்டப் பெயர்ப் பலகைகளில் பயன்படுத்த முடியாது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையே பயன்படுத்த முடியும். தேசிய மொழிக் கொள்கையை முறையாகச் செயற்படுத்துமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

கொழும்புத் துறைமுக நகரகத்தின் பெயர்ப்பலகையில் சிங்களம் மற்றும் சீனாவின் மாண்டரின் மொழி ஆகியனவே காணப்பட்டன. இது தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)



# அடுத்த பிரதமர் சரத் பொன்சேகா?

*பிரசாரம் ஆரம்பம்*

கொழும்பு, ஜூன் 4
ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை 2024 ஆம் ஆண்டில் பிரதமராக்கும் முயற்சியில் சமூக வலைத்தளங்களில் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சரத் பொன்சேகாவின் அரசியல் உறவாளர்கள், அவரது ஆலோசனை, அனுசரணை மற்றும் வழிகாட்டலின் கீழ் 'சரத் பொன்சேகாவை பிரதமராக்குவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் தற்போது பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரதமராக்கும் முயற்சியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஈடுபட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவம் மற்றும் அவரது செயற்பாடுகளால், சரத் பொன்சேகா அதிருப்தி அடைந்துள்ளார்.

இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேனவுடன் திரைக்குப் பின்னால் சஜித் பிரேமதாச இரகசிய பேச்சுக்களை நடத்தி வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மே 19 ஆம் திகதி நடைபெற்ற போர் வெற்றி விழாவை பகிஷ்கரிக்க வேண்டும் என்று சரத் பொன்சேகா உட்பட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சஜித் பிரேமதாசவிடம் தெரிவித்திருந்தனர். எனினும் அந்தக் கோரிக்கைகளைப் புறக்கணித்த சஜித் பிரேமதாச தனியே சென்று அதில் பங்கேற்றிருந்தார் என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் சஜித் பிரேமதாச என்றாவது ஒரு நாள் ஆட்சிக்கு வந்தால், பிரதமராக மைத்திரிபால சிறிசேனவை நியமிப்பார் என்ற சந்தேகம் கட்சியிலுள்ள பலருக்கும் எழுந்துள்ளது. (எ-4)

# தோல்வியுற்ற அரசு உடனடியாக பதவியிலிருந்து விலக வேண்டும்

*ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை*



கொழும்பு, ஜூன் 4
நாட்டில் அனைத்து விடயங்களிலும் தோல்வியுற்ற அரசாக இந்த அரசு உள்ளது. எனவே தோல்வியை ஏற்றுக்கொண்டு அரசு உடனடியாக பதவி விலகவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார, நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'நாட்டில் கொரோனாத் தொற்றின் தீவிரத்தால் பயணக் கட்டுப்பாடுகளைக் கண்டிப்பாக அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் பயணக் கட்டுப்பாடுகளின்போது மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதில் அரசு தோல்வியுற்றுள்ளது.

தற்போதுவரை அதிகமான சந்தர்ப்பங்களில் அரசின் தோல்வி நிரூபிக்கப்பட்டுள்ளதால், மக்களின் உயிரைக் காப்பாற்ற முடியாத அரசு உடனடியாக பதவி விலகுவது மிகவும் உகந்தது.

பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகள் போன்ற அனைத்துத் துறைகளிலும் அரசு தனது இய லாமையை காட்டியுள்ளது. அதனால்தான் தேல்வி அடைந்துள்ள அரசு உடனடியாக இராஜினாமா செய்யவேண்டும் என நாம் கோரிக்கை விடுக்கின்றோம்' - என்று குறிப்பிட்டுள்ளார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் மீண்டும் கொரோனா 24 பேருக்குத் தொற்று உறுதி!

பீஜிங், ஜூன் 4

கொரோனாத் தொற்றில் இருந்து சீனா, முழுவதுமாக விடுபட்டுவிட்டது என்று கருதப்பட்ட நிலையில், அங்கு புதிதாக 24 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் பலர் வேறு நாடுகளில் பரவும் திரிபு வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குவாங்டாங் மாகாணத்தில் புதிதாக 10 பேருக்கு உள்நாட்டில் பரவும் கொரோனாத் தொற்று இருப்பது நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வேறு முக்கிய நகரங்களில் 14 பேருக்கு வெளிநாடுகளில் காணப்படும் புதிய வகைத் தொற்று இருப்பதும் தெரியவந்துள்ளது.

ஷாங்காயில் 6 பேருக்கும், புஜியான், குவாங்டாங் நகரில் தலா 3 பேருக்கும், சிசுவான், யுனான் நகரங்களில் தலா ஒருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் பயணித்த இடங்களையும், அவர்களுடன் பழகியவர்களையும் கண்டறியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)

# பொலநறுவையில் திறக்கப்படும் சிறுநீரகவியல் மருத்துவமனை

கொழும்பு, ஜூன் 4

இலங்கை சீனா நட்பு தேசிய சிறுநீரகவியல் சிறப்பு மருத்துவமனை (SriLanka Friendship National Nephrology Specialty Hospital) பொதுமக்களுக்காக வரும் ஜூன் 11ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

சீனாவின் 12 மில்லியன் ரூபா நிதி உதவியில் பொலநறுவையில் அமைக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை, சிறுநீரகவியல் மருத்துவ சிகிச்சைக்காக தெற்காசியாவில் காணப்படும் மிகப்பெரிய சிறப்பு மருதுவமனையாகும். பொலநறுவை பொது மருத்துவமனைக்கு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ள இந்த தேசிய சிறுநீரகவியல் சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப்பணி 2018 ஜூலை 21ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த மருத்துவமனையில் 204 நோயாளர் சிகிச்சை படுக்கைகள் திறன் உள்ளது. இதில் 100 சிறுநீர் பிரிப்பு (Dialysis) இயந்திரங்கள் (குருதியிலிருந்து தேவையற்ற கழிவுகள் நீரைப் பிரித்தெடுத்தல்), சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நவீன சத்திரசிகிச்சை கூடங்கள், சமீபத்திய ஆய்வகங்கள் மற்றும் பிற நவீன தொழில்நுட்பங்கள் ஆகியவை உள்ளன. - என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 01 . 1939

மறைவு 17 . 05 . 2020

### அமரர் திரு.வ.முருகேசு

(ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்-வலி வடக்கு)

**திதி : 04.06.2021**

காலன் உங்களை காலத்தால் அழைத்தவேளை,
விதி செய்த சதி என்று எம்மனது எண்ணினாலும்!

வார்த்தைகள் ஏதும் இல்லை, இவ்வலியைத் தேற்றிவிட,
ஏற்க முடியவில்லை இன்றுவரை நீங்கள் எம்முடன் இல்லை என்பதை!

மரணம் நிச்சயம் தான் ஆனாலும் நெருங்க முடியாத தூரங்களால் ....
மனம் அதை ஏனோ ஏற்க மறுக்கின்றது.

ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம் இதயம்.
எம் வாழ்வு உள்ளவரை நிழலாய் நீங்கள் தொடர்வீர்கள்....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காட்டடைப்பு வீதி,
காங்கேசன்துறை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 11 . 1946

மறைவு 03 . 06 . 2021

### திரு. சபாரத்தினம் தெட்சணாமூர்த்தி

**கோண்டாவில், யாழ்ப்பாணம்**

யாழ் கொக்குவில், நந்தாவில் அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் தெட்சணாமூர்த்தி அவர்கள் நேற்று (03.06.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சபாரத்தினம் பூபதி தம்பதியரின் அன்பு மகனும், இளையதம்பி கந்தையா நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கலைவாணி அவர்களின் அன்பு கணவரும், பிரஜீவ் (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, சாங்கானை), Dr.பிரவீனா (வைத்திய அதிகாரி, மெல்பேர்ண், அவுஸ்திரேலியா), Dr. பிரசாந் (வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, பாணந்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சர்வானந்தம், சரோஜினிதேவி சொர்ணமலர், ஞானரூபி, வசந்தரூபி, கணேசமூர்த்தி, சாந்தரூபி, சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு சகோதரரும், றஜீனா (பிரதேச செயலகம், நல்லூர்), Dr.பாலமுருகன் (வைத்திய அதிகாரி, மெல்பேர்ண், அவுஸ்திரேலியா), Dr.சர்மிளா (வைத்திய அதிகாரி, தேசிய வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சர்வேஸ்வரரூபி, சர்வேஸ்வரவிமோசனம், காலஞ்சென்ற வைரவபிள்ளை, சுயம்புலிங்கம், பாலச்சந்திரன், மகேஸ்வரன், செல்வபாஸ்கரி, கருணாமூர்த்தி, ஜெயரூபி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரவி, ஆத்மிகா, அருண்மொழி, அகானா, அக்ஷரன் ஆகியோரின் அன்பு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.06.2021) வெள்ளிக்கிழமை மதியம் கோண்டாவில் கிழக்கு ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**
**பிரஜீவ் (மகன்) - [illegible]**
**Dr.பிரசாந்த் (மகன்) - [illegible]**
**Dr.பிரவீனா (மகள்) - +61470368480**

## மரண அறிவித்தல்



### ஜோசப் விக்ரர் ஜெயராஜா

**(றோஸ் ஆர்ட்ஸ் ஸ்ரூடியோ)**

யாழ்ப்பாணம் பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும் ஓடக்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் விக்ரர் ஜெயராஜா நேற்று (03.06.2021) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் பிலிப் ஜோசப் எலிசபேத் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் ஜெயமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், அன்றனீனா ஜெயந்தியின் பிரியமான கணவரும், அனற் தர்ஷினி (லண்டன்), அஜித் ஜெயதீபன் (ஒசுசல), ஜெனற் சிரானி (வீரகேசரி), கஜன் (பெறாமகன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகாந்த், ஏஞ்சலின் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷகான், ஷவீன், மக்டலின், அற்ரியன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஜெயசீலி, ஜெயராணி, தேவி மற்றும் ஜெயவதி, பேணார்ட், ஜெயசோதி, அருட்சகோதரி லூசியா (திருச்சிலுவை கன்னியர் சபை), ஜெயக்குமார், ஜெயமலர், தாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தி (லண்டன்), செவ்வந்தி (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), ஆனந்தி (லண்டன்), ரூபேந்தி (கனடா), தமயந்தி (லண்டன்), ரவீந்திரன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), சுமதி, குலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.06.2021) வெள்ளிக்கிழமை மாலை புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**ஓடக்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு:**
**அஜித் (மகன்) 077 155 4333**
**சிரானி (மகள்) 077 286 9339**
**கஜன் (பெறாமகன்) 077 908 0916**
**மருமகன் - 00447533437444**
**மகள் - 00447588400362**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** பலகாலம் மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை நீங்கும். வாக்கு றுதி யைக் காப்பாற்றி நிம்மதி அடைவீர்கள். பயம் தீரும். இளைஞர்களின் புகழ் அதிகரிக்கும்.

**இடபம்:** வாழ்வில் முன்னேறுவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்துவீர்கள். உங்களின் பலகாலப் பொறுமைக்கு இன்று பெருமை கிடைக்கும் ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.

**மிதுனம்:** சேமிப்பு உயரும். புதிய திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும். உயர் கல்வி அல்லது பணிநிலை குறித்து யோசிப்பீர்கள். முன்பு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்:** மற்றவர் தலையீட்டால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும் நாள். தோல்வி யுற்றவிடயத்தில்புதுக்கோணத்தில் வெல்வீர்கள். சுபநிகழ்ச்சி காரணமாக நெருங்கிய விருந்தினர் வருகை உண்டு.

**சிம்மம்:** செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். கனவு நனவாகும். தவறுகளைத் திருத்திக் கொள்வது பற்றிய சிந்தனை மேலோங்கும். கடன் சுமை குறையும்.

**கன்னி:** வெளியூரிலிருந்து நல்ல தகவல் வரலாம். சிக்கல் நீங்கும். நெருங்கிய நண்பர்களிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். வளர்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்:** வருங்கால நலன் பற்றிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட வாதத்தைத் தீர்த்து வைப்பீர்கள். கவனத்துடன் இருக்க வேண்டும்.

**விருச்சிகம்:** பணத்தேவை நிறைவேறும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். கணவர் பாராட்டுவார். குழந்தைகள் பற்றிய பிரச்னைகள் தீரும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** மனச்சுமை குறையும் நாள். உறவை ஒட்டுவதில் ஆர்வம் கூடும். நவீன பொருள்கள் வாங்குவதில் அதிகச் செலவு செய்யாதீர்கள். புதியவரின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்:** ஜாமீன் போட்ட தொகை திருப்பப்படுவதால் நிம்மதி ஏற்படும். பிள்ளைகளால் மனம் மகிழும் . மனச்சுமை உங்ககளால் குறையும் பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

**கும்பம்:** சொத்து சம்பந்தமான வழக்கு விஷயங்கள் தள்ளிப்போகும். புதிய விஷயங்களில் ஆர்வம் செலுத்தி கற்றுக்கொள்வீர்கள்.

**மீனம்:** பங்குச் சந்தையில் அதிக முதலீடுகள் செய்யவேண்டாம், வாழ்க்கைத் துணையின் சகோதரர் மூலம் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினரிடமிருந்து நல்ல செய்தி ஒன்று வரும்.

# வெங்கட் பிரபுவின் 'கசட தபற' ஓடிடியில் வெளியீடு?

இயக்குநர் வெங்கட் பிரபு தயாரித்துள்ள படம் 'கசட தபற'. 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு எடுக்கப்பட்டுள்ள இந்த படத்தை பிரபல இயக்குநர் சிம்பு தேவன் இயக்கியுள்ளார். இந்த படத்தில் முன்னணி நடிகர்கள், நடிகைகள் கூட்டணி இணைந்து நடித்துள்ளமை எதிர்பார்ப்பை அதிகரிக்க செய்துள்ளது.

இந்த படத்தில் நாயகர்களாக ஹரீஷ் கல்யாண், சுந்தீப் கிஷன், ஜெய், மிர்ச்சி சிவா, சாந்தனு, வெங்கட் பிரபு, பிரேம்ஜி அமரன், கலையரசன் ஆகியோர் நடித்துள்ளனர்.

நாயகிகளாக ப்ரியா பவானி ஷங்கர், ரெஜினா கேஸண்ட்ரா, விஜயலட்சுமி , ஜனனி ஆகியோர் நடித்துள்ளனர். 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா, சந்தோஷ் நாராயணன், ஜிப்ரான், சாம் சிஎஸ், பிரேம்ஜி மற்றும் ஷான் ரோல்டன் ஆகியோர் இசையமைத்துள்ளனர்.

இந்நிலையில் 'கசட தபற' திரையரங்குகளில் இல்லாமல் நேரடியாக ஓடிடி யில் வெளிவரவுள்ளது என தகவல்கள் பரவி வருகிறது. இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.






# படித்ததில் பிடித்தது

ஒரு வைத்தியர் மிக அவசரமாக ஓடி வந்து ஒப்ரேசன் அறைக்குள் நுழைந்து ஆடைகளை மாற்றிக்கொண்டு தியேட்டருக்குள் நுழைந்தார்.....

அங்கு பிள்ளையின் அப்பா மிகவும் கோபத்துடன் "இவ்வளவு லேட்டாவா வருவீங்க; என் பிள்ளைக்கு என்னவானாலும் நடந்தால் யார் பொறுப்பு" என்று காரசாரமாகப் பேசினார்...

வைத்தியர் சிரித்த முகத்துடன் கூறினார். "எனக்கு வைத்தியசாலையில் இருந்து அழைப்பு வந்தது. அவசரமாக ஓடி வந்துவிட்டேன் பொறுமையாக இருங்கள். உங்கள் மகன் இறக்கவில்லை. நான் பார்த்துக்கொள்கிறேன்" - என்றார்.

"ஆமாம் சொல்வீர்கள். உங்கள் மகனுக்கு இப்படி ஒன்று நடந்தால் இப்படி தாமதமாக வந்து இப்படியெல்லாம் பேசுவீங்களா" என்றார் பிள்ளையின் தகப்பனார்..

புன்னகையுடன் வைத்தியர் , "பொறுமையாக இருங்கள்; நான் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஒப்ரேசன் அறைக்குள் சென்று சில மணித்தியாலங்கள் கழித்து வெளியே வந்து, "உங்கள் மகன் மிக்க நலமாக உள்ளார்.. மேலதிக விடயங்களை நேர்ஸிடம் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு அவசரமாகப் புறப்பட்டு சென்றார்.... அவ்விடம் வந்த நேர்ஸிடம் தகப்பனார் , பிள்ளை தொடர்பில் கேட்டுவிட்டு ஏன் அவசரமாக டாக்டர் போகிறார் என்று வினவினார்.

அதற்கு நேர்ஸ் "அவரது மகன் நேற்று விபத்தில் சிக்குண்டு உயிரிழந்தார். அவரது இறுதி கிரியை மயானத்தில் நடந்து கொண்டிருக்கிறது.. அந்தநேரம் உங்கள் பிள்ளையின் நிலை குறித்து அழைப்பு ஏற்படுத்தியபோது அதை விட்டுட்டு உடனே ஓடி வந்து ஒப்ரேசன் செய்துவிட்டு மீண்டும் மகனின் இறுதி சடங்குக்கு சென்றுவிட்டார்" என கூறினார்...

தகப்பன் தான் ஆவேசப்பட்டது தவறு என்பதை உணர்ந்தவராக மிகுந்த கவலையுடன் தன் மகனை பார்க்கச் சென்றார்..

**நீதி : யாரையும் வெளியில் பார்த்து எடை போடாதீர்கள். அவர்களுக்குள்ளும் உங்களை விட அதிகம் பொறுப்பும் கவலையும் இருந்திருக்கும்.... எனவே வார்த்தைகளை பேணிக்கொள்ளுங்கள்.. !!**







## twitter

Prof. Jesi Retweeted
**பழைய சோறு** @Aakashkannan96 · 14h
நாம சாப்பிட்ட இலைய
இன்னொருவர் எடுப்பது
புண்ணியமல்ல
அடிமைத்தனம்..!

ஜோக்கர் சித்தர் and 43 others follow
**மௌனகவி** @mounam_twitz · 13h
துரோகிகளிடம் "கோபம்" இருக்காது கோபப்படுபவர்களிடம் "துரோகம்" நிச்சயம் இருக்காது.

**ச ப் பா ணி** @manipmp · 12h
நாமே கேட்கும் பாடல்களைவிட
யதெச்சையாய் நம் காதில் விழும் பாடல்களுக்கு ஈர்ப்புத் தன்மை அதிகம்

**HBDSid அமைதினி** @Lachu_Twitz · 2h
நாம் யாருக்கு
நல்லது செய்கிறோமோ
அவர்களே
நமக்கு நாம் அறியாதபடி தீமைகளை
இழைத்திடலாம் இருந்தும்
வருந்த வேண்டாம்
அவரவர் செய்த வினைகள்
அவரவரை சேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முயலின் வெற்றி!

யோசனையுடன் படுத்திருந்தது முயல். அப்போது, 'என்ன யோசனையாக இருக்கிறாய்...' என்று கேட்டது நரி.

"என் முன்னோரில் ஒருவர், ஆமையிடம் தோற்ற கதையை காலம் காலமாக சொல்லி வருகின்றனர். மிகவும் வேதனையாக இருக்கிறது. அதனால், மீண்டும் ஒரு பந்தயத்தில், ஆமையை ஜெயித்து, அந்த அவப்பெயரை நீக்குவது பற்றி யோசிக்கிறேன்..."

"நல்ல யோசனை தான்; நாளையே பந்தயத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்..."

சொன்னபடியே ஏற்பாடு செய்தது நரி. பந்தய பாதையும் வகுக்கப்பட்டது.

மறுநாள், மிருகங்கள் எல்லாம் கூடின.

ஆமையும், முயலும் மிடுக்குடன் வந்தன.

பந்தயம் துவங்கியது.

வழக்கம் போல, மெதுவாக நகரத் துவங்கியது ஆமை.

துள்ளிக்குதித்தபடி, "சோம்பேறியாய் தூங்காமல், வெற்றி இலக்கை அடைய வேண்டும்" என ஓடியது முயல்.

வழியில் ஒரு புதர் தென்பட்டது. அங்கு முனகல் சத்தம் கேட்டது.

நின்று கவனித்தது முயல்.

ஏதோ ஒரு பிராணி முனகி கொண்டிருந்தது.

"காப்பாற்றலாமா... ஓடிவிடலாமா"

சற்று நிதானித்து யோசித்தது முயல். அதன் மனம் நெகிழ்ந்தது.

முனகும் மிருகத்தைக் காப்பாற்றிய பின் ஓடலாம் என முடிவு செய்தது. பந்தயப் பாதையை விட்டு புதருக்குள் நுழைந்தது முயல்.

முட்புதரில் சிக்கி, தவித்தபடி இருந்தது ஒரு குட்டி ஆமை. கடும் போராட்டத்துடன் புதரை விலக்கி, பாதை ஏற்படுத்தியது. குட்டி ஆமையை கவனமாக தூக்கி, பாதுகாப்பாக வெளியே விட்டது.

குதூகலித்து நன்றி சொன்னது குட்டி ஆமை. பின், பந்தயப் பாதைக்கு வந்து, ஓட துவங்கியது. நேரம் கடந்து விட்டது.

வெற்றிக் கோட்டை நெருங்கியது ஆமை. அதிவேகம் எடுத்தும், முயலின் திறன் பயனற்று போனது. எல்லா மிருகங்களும் கேள்வி எழுப்பின. விவரத்தைக் கூறியது முயல். அந்த செயலை புகழ்ந்தன விலங்குகள். உதவிய பாங்கை பாராட்டின. குழந்தைகளே... வெற்றி முக்கியமானது தான்; அதை விட, உதவும் கடமை மிக முக்கியம்!

## ஆங்கிலம் கற்போம்

| | |
|---|---|
| Good Idea | நல்ல யோசனை |
| No Time | நேரம் இல்லை |
| well | நல்லது |
| Sometime | சிலநேரங்களில் |
| Don't Worry | கவலைப்படாதே |
| Sorry | மன்னிக்கவும் |

## அம்மாவின் அன்பு

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளிற் போடும் அம்மா

## யானைகள்



நிலத்தில் வாழும் உயிர்களில் மிகப்பெரிய பாலூட்டி யானைதான்.

யானைகள் ஆப்பிரிக்க கண்டத்திலும் ஆசியாவிலும் வாழ்கின்றன.

யானைகளில் இரண்டு வகைகள் உள்ளன. ஆசிய யானை, ஆப்பிரிக்க யானை. ஆப்பிரிக்க யானைகளில் பெண், ஆண் இரண்டுக்கும் தந்தங்கள் உண்டு. ஆசிய யானைகளில் ஆண் யானைக்கு மட்டுமே தந்தங்கள் உண்டு. உணவைத் தோண்டித் தின்பதற்குத் தந்தங்கள் உதவுகின்றன.

பெண் யானைகளுக்கு 12 வயதாகும்போது, குட்டிகளை ஈனத் தொடங்குகின்றன.

யானைகளின் கர்ப்ப காலம் 22 மாதங்கள்.

யானைகளால் தந்தங்களைப் பயன்படுத்தி, நிலத்தடி நீரையும் தோண்டிப் பருக முடியும்.


யானைகளுக்குப் பெரிய, மெல்லிய காதுகள். யானையின் காதுகளில் அமைந்துள்ள ரத்தத் தமனிகள்தான் அவற்றின் உடல் வெப்பநிலையைச் சீராக வைக்கின்றன. உஷ்ணமான தட்ப வெப்ப நிலையில் காதுகள் வழியாகப் பயணிக்கும் ரத்தம் அதன் உடலைக் குளிர்விக்கிறது.

பொதுவாக யானைகளை எந்தப் பிராணியும் உணவாகக் கொள்வதில்லை. இருப்பினும் ஆபிரிக்கச் சிங்கங்கள், குட்டி யானைகள் மற்றும் பலவீனமான நிலையில் உள்ள யானைகளை வேட்டையாடித் தின்னும். யானைகளுக்குப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பவர்கள் மனிதர்களே. வேட்டையாடுவது, வாழ்விடத்தை ஆக்கிரமிப்பது ஆகியவற்றால் யானைகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

யானையின் தும்பிக்கையால் ஒரு பொருளின் அளவு, வடிவம், வெப்பநிலையை உணர முடியும். உணவைத் தூக்கவும், தண்ணீரை எடுத்து வாயில் ஊற்றவும் தும்பிக்கை பயன்படுகிறது.

யானையின் தும்பிக்கை 2 மீற்றர் அளவு வளரக் கூடியது. தும்பிக்கையின் கனம் 140 கிலோகிராம். ஒரு லட்சம் தசை நாண்களால் உருவாக்கப்பட்டது அது. ஆனால் தும்பிக்கையில் எலும்புகள் இல்லை. பெண் யானைகள் சேர்ந்து வாழக்கூடியவை. ஆண் யானைகள் 13 வயதில் தங்கள் மந்தையை விட்டுப் பிரிந்து செல்கின்றன. அந்த வயதிலிருந்து ஒரு ஆண் யானை தனியாகவே வாழத் தொடங்குகிறது.

## ஆலயங்களுக்கு செல்ல வழிகாட்டுவோம்






01. உலகிலே 19 ஆவது இடத்தை பிடித்துள்ள கோபுரம் எது?
தாமரை கோபுரம்

02. இலங்கை அஞ்சல் திணைக்களங்கள் எத்தனை உள்ளது?
653

03. இலங்கையின் பிரதான எரிபொருள் எது?
விறகு

04. இலங்கையின் பிரதான குளங்கள் எத்தனை?
69

05. இலங்கையின் பிரதானமான அணைக்கட்டுகள் எத்தனை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்கள் அழகை பேண ரிப்ஸ்!

ஆள்பாதி, ஆடைபாதி", "ஆளைப் பார்த்து எடை போடு", "அகத்தின் அழகு, முகத்தில் தெரியும்" என்று அழகைப் பற்றி தமிழில் பல கூற்றுகள் இருந்தாலும், ஏனோ ஆண்கள் பலர் அழகைப் பேணுவதில் கவனம் செலுத்துவதில்லை. அழகு மற்றும் அழகு நிலையங்கள் எல்லாம் பெண்கள் சம்பந்தப்பட்டது. நமக்கும், அதற்கும் ரொம்ப தூரம் என்று முக்கால்வாசி ஆண்கள் ஒதுங்கி விடுகிறார்கள்.

அதுவும் திருமணம் ஆன ஆண்கள் என்றால் கேட்கவே வேண்டாம். நமக்கு தான் கல்யாணம், குழந்தை, என்றாகிவிட்டதே என்று சலிப்புடனேயே இருப்பார்கள்.

நாம் ஏன் தோற்றத்தில் அக்கறை செலுத்தவேண்டும் என்று நினைத்தீர்களேயானால், நீங்கள் "உற்சாகமில்லா மனநிலை" என்ற படிக்கட்டில் ஏற ஆரம்பித்து விட்டீர்கள், இல்லை, இல்லை, இறங்க ஆரம்பித்துவிட்டீர்கள் என்றே அர்த்தம்.

வாழ்க்கை தொடங்குவதே திருமணத்துக்கு பின்பு தான் என்பதை உணருங்கள். உங்கள் செல்லக் குழந்தை "எனது அப்பா" என்று நண்பர்களிடமும், உங்கள் அன்பு மனைவி "எனது கணவர்" என்று உற்றார், உறவினர்களிடமும் அறிமுகம் செய்வதில் எப்போதும் ஆனந்தம் அடைவார்கள். அப்போது நீங்கள் பார்க்க நன்றாக இருந்தால் தானே அவர்களுக்கும் பெருமை.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நானும் சிலரைப் போல பணத்தை அழகு நிலையங்களில் செலவு செய்யவேண்டுமா? காசை கரியாக கரைக்கணுமா?" என்று கேட்பீர்களேயானால் அதுவல்ல நான் கூற நினைப்பது.

சாதாரணமாக முடிவெட்டுதல், முகச்சவரம் செய்தல் என்று ஆரம்பித்து உங்களால் முடிந்ததை, இயன்றதை மாதம் தோறும் தவறாமல் செய்துகொள்ளுங்கள். இதை செலவு என்று ஒருபோதும் நினைக்காதீர்கள்.

அத்துடன் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காட்சி அளியுங்கள். ஆம், எப்பொழுதும் சிடுசிடு என்று இருப்பவர்களை யார் தான் ரசிப்பார், சொல்லுங்கள்? இதனால் உங்கள் தன்னம்பிக்கை மட்டுமல்ல செயல்திறனும் கூடும். உங்கள் மனைவி மக்களும் பெருமை கொள்வர்

ஆண் அலங்காரத்தில் அடுத்த முக்கிய பிரச்சினை தொப்பை. "உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே" என்று திருமூலர் கூற்றுக்கேற்ப தினமும் குறைந்தது ஒரு முப்பது நிமிடம் உடற்பயிற்சி செய்து நீங்கள் உடல்நலத்துடனும், மனநலத்துடனும் மட்டுமின்றி தொந்தி இல்லா புற அழகுடனும் இருக்கலாமே.

அடுத்து உடல் துர்நாற்றம். புறஅழகை காக்க நம் மேல் எந்தவித துர்நாற்றமும் இல்லாமல் பார்த்துக்கொள்வது மிக முக்கியம். தினமும் உண்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியம் தினமும் குளிப்பது.

"கூழ் ஆனாலும் குளித்து குடி, கந்தல் ஆனாலும் கசக்கி கட்டு" என்று பழமொழிக்கேற்ப ஆடைகளை துவைத்து அணியவேண்டும். ஆடையின் நிறம் மற்றும் அளவு நமக்கு தகுந்தாற் போல் பார்த்துக் கொள்வது முக்கியம்.

வெயில் காலங்களில் மட்டுமின்றி முடிந்தவரை பருத்தி ஆடைகளை அணிவது உடல் நலத்துக்கும் நல்லது, பார்க்கவும் நன்றாக இருக்கும்.

புற அழகில், நாம் நமது தனிப்பட்ட சுகாதாரத்தை தொடர்ந்து பேணுதல் மிக முக்கியம். நகம் வெட்டுதல், முடி வாருதல், முகம் கழுவுதல் என்று நம்மை நாமே கவனித்து செய்துகொள்ள வேண்டும். காலணிகளுக்கும் முக்கியத்துவம் தந்து கருப்பு பூச்சு அணிந்து செல்ல வேண்டும்.

தினமும் சில நிமிடம் கண்ணாடி முன்பு நின்று உங்களை நீங்களே பார்த்து ரசியுங்கள். உங்களுக்கு நீங்களே முதல் ரசிகனாய்.



# வாசனை திரவியங்கள் தேர்ந்தெடுப்பது எப்படி?

வாசனைத் திரவியங்கள் ஒருவித வசீகரமான சூழ்நிலையை ஏற்படுத்தும். தாழ்வு மனப்பான்மை இல்லாமல் சந்தோஷமாக வெளியில் சுற்ற முடிகிறது. பலர் இருக்கக்கூடிய இடத்தில் உங்களை தனித்தன்மை வாய்ந்தவராகவும் காட்டுகிறது. தன்னம்பிக்கையுடன் செயற்பட முடிகிறது.

- தங்களுடைய உடலின் தன்மைக்கேற்பவும், காலநிலையை பொறுத்து வாசனை திரவியங்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- வெயில் காலத்தில் லேசான வாசனைத் திரவியங்களையும், குளிர்காலங்களில் அதிக வாசனை தரக்கூடிய திரவியங்களையும் பயன்படுத்த வேண்டும்.
- சில வாசனைத் திரவியங்கள் அதிக வாசனை கொண்டவையாக இருக்கும். அதன் வாசத்தின் தூரம் மிகவும் நீண்டதாக இருக்கும்.
- பலருக்கு அதீத வாசனை பிடிக்காமல் தலை சுற்றல், தலைவலி போன்றவை வரும். அப்படியான வாசனைத் திரவியங்களை தவிர்த்து எல்லோரும் விரும்பத்தக்க வாசனைத் திரவியங்களை உபயோகித்தால் அனைவருக்கும் நல்லது.
- கோடையில் கலப்படமற்ற வாசனைத் திரவியத்தை தேர்வு செய்வது அவசியம். அது நீண்ட நேரம் வியர்வையையும் தாண்டி நிற்கும்.
- இலகுவான வாசனையை விரும்பினால், பூக்களின் நறுமணத்தை எடுத்துக்கொள்ளலாம். புதினா அல்லது 'சிட்ரஸ்' நறுமணங்களை தேர்வு செய்யலாம். இது புத்துணர்ச்சியூட்டும்..
- அதிக நறுமண தொனியை விரும்பினால், சந்தனம் போன்றவற்றை தேர்ந்தெடுக்கலாம்.





# கத்திரிக்காய் ஊறுகாய் செய்வது எப்படி?

**தேவையான பொருட்கள் :**
கத்திரிக்காய் 500 கிராம், மஞ்சள்தூள் கால் டீஸ்பூன், புளி எலுமிச்சம் பழ அளவு, மிளகாய்தூள் 50 கிராம், வெந்தயத்தூள் ஒரு டீஸ்பூன், எண்ணெய் 100 கிராம், உப்பு தேவையான அளவு.

**தாளிக்க:**
வெந்தயம் அரை டீஸ்பூன், கடுகு ஒரு டீஸ்பூன், பெருங்காயத்தூள் கால் டீஸ்பூன், காய்ந்த மிளகாய் 2, எண்ணெய் ஒரு டீஸ்பூன்.

**செய்முறை:**
முதலில் கத்திரிக்காயை சுத்தம் செய்து, துடைத்து எடுத்து, 'கட்' செய்ய வேண்டும். புளியைக் கரைத்து வடிகட்டி, உப்பு, மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், வெந்தயத்தூள், சேர்த்து, கத்திரிக்காயுடன் கலக்க வேண்டும். அப்படியே இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலையில் புளிக் கரைசலை வடிகட்டி, கத்திரிக்காயை எடுத்து பிளாஸ்டிக் போத்தலில் ஒருநாள் முழுக்க வெயிலில் வைத்து எடுக்க வேண்டும்.

பிறகு, அதில் 100 கிராம் எண்ணெய்யைக் காய்ச்சி ஊற்றிக் கலக்கவேண்டும். கடாயில் ஒரு டீஸ்பூன் எண்ணெய் விட்டு, சூடானதும் கடுகு, வெந்தயம், பெருங்காயம், காய்ந்த மிளகாய் தாளித்து, கத்திரிக்காயில் போட்டுக் கலந்தால் சுவையான கத்திரிக்காய் ஊறுகாய் தயார்.



# மன உளைச்சலை கட்டுப்படுத்துவது எப்படி?

- புன்னகை மிகச் சிறந்த மருந்து என்பதைப் புரிந்து கொள்ளுக்கள். இதற்காக நகைச்சுவை சினிமாக்கள், வீடியோக்களைப் பார்க்கலாம்; உங்களுக்கு வயிறு வலிக்கும் அளவுக்கு சிரிப்பு மூட்டுபவர்களுடன் உரையாடலாம். மொத்தத்தில் நீங்கள் சிரிக்க வேண்டும். அவ்வளவுதான். சிரித்து சிரித்தே மன உளைச்சலை அகற்றிவிட முடியும்.
- உங்களுடைய நண்பர்களை அல்லது உங்களுக்கு மிகவும் பிடித்தவங்களை அழைத்துக்கொண்டு உங்களுக்கு பிடித்த இடத்துக்கு செல்லுங்கள்.
- இசையால் வசமாகா இதயம் எது? பிடித்த பாடல்களைப் பாடிப் பார்க்கலாம். மனம் லேசாகும். உங்களுக்கு ரொம்பப் பிடித்த விடயங்களில் ஈடுபடலாம். ஓய்வெடுங்கள்
- மிகுந்த சுவை கொண்ட ஒரு பிரியாணி கடைக்குச் சென்று மனஉளைச்சல் தீருமளவு சாப்பிடுங்கள்.
- நீச்சலில் ஆர்வம் இருந்தால் தண்ணீருக்குள் இறங்கி நீச்சலடியுங்கள்.
- அப்படியும் சரி வரவில்லையென்றால் வீட்டில் உள்ள பழைய பொருள்களை ஒரு பையில் எடுத்துக்கொண்டு யாருமில்லாத இடத்தில் சென்று போட்டு உடையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமெ....

இந்நிலையில் இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, அந்தத் தீர்மானத்தின் நோக்கங்கள் சந்தேகங்களைக் கொண்டவை என்று குறிப்பிட்டுள்ளது.

ஆதாரமற்ற, நிரூபிக்கப்படாத, அப்பட்டமான பொய்களைக்கொண்ட குற்றச்சாட்டுக்களைக் கொண்டுள்ள இந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கங்களுக்கு இலங்கை அரசு கடுமையாக எதிர்ப்புக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் தவறான, பக்கச்சார்பான மற்றும் ஒரு தலைப்பட்சமான தன்மையைக் கருத்தில்கொண்டு, இது வெறுமனே மனித உரிமை சார்ந்த தீர்மானம் அல்ல என்றும், மாறாக அமெரிக்கா உட்பட 32 நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதற்காக அமெரிக்கக் காங்கிரஸில் உள்ள ஒத்த கருத்துடைய தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகளாக அறியப்பட்டவர்களால் முன்னெடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகத் தென்படுகின்றது என்றும் இலங்கை விமர்சித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசு தனது பதிலை வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக வெளிநாட்டு விவகாரங்கள் சபை, ஆசியா தொடர்பான துணைக்குழு சபை மற்றும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு சமர்ப்பிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### கொரோனா...

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 608ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

### பொலிஸாரால்...

ஆனால், பொலிஸாரால் தாக்கப்பட்டே இளைஞன் உயிரிழந்தார் என்று அவரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்:

இருதயபுரம் பகுதியைச் சேர்ந்த சந்திரன் விதுசன் (வயது-22) என்ற இளைஞர் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்டு சில மணி நேரத்தில் அவர் நோய்வாய்ப்பட்டார். மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும்போது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இளைஞனின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரியால் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டது. இளைஞன் ஐஸ் போதைப்பொருளை அதிகளவில் உட்கொண்டமையே இறப்புக்குக் காரணம் என்று சட்ட மருத்துவ அதிகாரியால்ல் அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆனால், பொலிஸாரின் கருத்தை உறவினர்கள் ஏற்க மறுத்துள்ளனர். எங்கள் கண்முன்னால் பொலிஸார் சகோதரனைத் தாக்கினார்கள் என்று உயிரிழந்தவரின் சகோதரி, இறப்பு விசாரணையில் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (ம)

### 49,280....

மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது;

கொவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குக் கிடைத்தன. கூடுதல் முக்கியத்துவம் கருதியவர்களுக்கு அந்தத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட மே 30ஆம் திகதி 2 ஆயிரத்து 947 பேருக்கும், மே 31ஆம் திகதி 6 ஆயிரத்து 123 பேருக்கும், ஜூன் முதலாம் திகதி 13 ஆயிரத்து 822 பேருக்கும், ஜூன் 2ஆம் திகதி 23 ஆயிரத்து 454 பேருக்கும், ஜூன் 3ஆம் திகதி ஆயிரத்து 740 பேருக்கும் என மொத்தமாக 48 ஆயிரத்து 86 பேருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஆயிரத்து 194 தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. எனவே நேற்று மாலை வரையில் மொத்தமாக 49 ஆயிரத்து 280 தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ம-26)

### கந்தரோடையில்...

திருடர்கள் குழு, வீட்டில் உறக்கத்திலிருந்தவர்களைக் கடுமையாகத் தாக்கியும், அச்சுறுத்தியும் பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். கந்தரோடை மேற்கு சங்காவத்தை வீதியில் அமைந்துள்ள வீட்டிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

வீட்டின் ஒரு கதவு ஒரு லொக் மட்டும் போட்டுப் பூட்டப்பட்டிருந்த நிலையில், அவ்வழியாக வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் நேராக அறைக்குள் சென்று அங்கு உறங்கிக்கொண்டிருந்த கணவனையும், மனைவியையும் தட்டி எழுப்பித் தாக்கியுள்ளனர்.

பின்னர் வீட்டுக்குள் இருந்த வயோதிபப் பெண்ணையும் அந்தத் திருடர்கள் தாக்கியதுடன் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டும் சென்றுள்ளனர்.

தாக்குதல் குறித்துத் தகவல் வழங்கப்படக்கூடாது என்பதற்காக அவர்களின் கைத்தொலைபேசிகளைப் பறித்து அருகிலுள்ள காணியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

கைத்தொலைபேசியில் கிடைத்த தடயங்களைக்கொண்டு மோப்ப நாயின் உதவியுடன் சந்தேகத்தின் பெயரில் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம-26)

### அராலி...

மேற்படி வெடிபொருள்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

குறித்த வெடிகுண்டுகள் நீதிமன்றின் அனுமதியைப் பெற்று அகற்றப்படவுள்ளன. அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-27)

### 5000 ரூபா...

கூலித் தொழிலாளிகள். ஆனால் கொரோனா பெருந்தொற்றுக்கான கொடுப்பனவை வழங்காமல் இந்த அரசு எம்மை ஏமாற்றியுள்ளது. இதற்கு முதல் புதுவருடத்துக்குக் கொடுத்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் எமக்குக் கிடைக்கவில்லை. தற்போது இந்தக் கொடுப்பனவிலும் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

சமுர்த்தி பயனாளிகளுக்குத்தான் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. தற்போது வேலைக்குச் செல்லமுடியாமல் நாங்களும் கஷ்டத்தின் மத்தியில் தான் வாழ்க்கையை நடத்துகின்றோம். பயணத்தடையால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம்.

அவ்வாறெனில் அன்றாட கூலித் தொழிலாளர்களான எமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு பாதிப்பில்லையா? அது பாதிப்பாகக் கருதப்பட மாட்டாதா? - என்றனர். (ம-27)

### நேற்று...

811ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 397ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 848ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### பி.சி.ஆர்...

விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:


அரசு சரியான தருணத்தில் பயணத் தடை விதிக்காமல் இருந்திருந்தால், நாட்டின் சுகாதாரத்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் குழப்பம் ஏற்பட்டிருக்கும். நாட்டின் மருத்துவமனைகளில் கொரோனா நோயாளர்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, நோயாளர்களை தரையில் வைத்து சிகிச்சையளிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா தீவிரமடைந்த தைத் தொடர்ந்து, ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைக் கவனிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளின் வினைத்திறன்மிக்கதன்மையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டாம் டோஸ் வழங்குவதை துரிதப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது. அத்துடன், கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு நேரமொன்றை ஒதுக்கித்தருமாரும் இலங்கை மருத்துவ சங்கம் குறித்த கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளது. (ம-22)

### இணுவிலின்...

கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இணுவில் கிராமத்தில் ஜே/190 கிராம அலுவலர் பிரிவில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. (ம-20,26)




## கடும் காற்றுக் காரணமாக பிடுங்கி எறியப்பட்டன கூரைகள்

கிளிநொச்சி,ஜூன் 4

கடும் காற்றுக் காரணமாக கிளிநொச்சி அக்கராயன் மேற்கு பொது நோக்கு மண்டபத்தின் கூரைகள் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. அக்கராயன் மேற்கில் வாழ்கின்ற குடும்பங்களுக்கான பொது நிகழ்வுகள், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரின் செயற்பாட்டு இடமாக இந்தப் பொது மண்டபம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-13)

## இந்தோனேசியாவில் நேற்று நிலநடுக்கம்!




யகார்தா, ஜூன் 4

இந்தோனேசியாவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சுலாவெசித் தீவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 அலகுகளாகப் பதிவானது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து எந்தத் தகவலும் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் முடக்கம் சாத்தியப்படாது

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு,ஜூன் 4**

**மருத்துவ நிபுணர்கள் கூறுவதைப் போன்று நாட்டை தொடர்ச்சியாக முடக்கி, மக்களை வீடுகளுக்குள் அடைத்து வைத்திருக்க முடியாது.**

இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் அதேவேளை, மக்களின் நாளாந்த வாழ்க்கை முறைமைக்கும் இடமளிக்க வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் மக்களின் செயற்பாடுகள் பிரதானமானவை. மக்கள் தமது பாதுகாப்பை முதலில் உறுதிப்படுத்த வேண்டும்.

ஏனைய நாடுகளை விடவும் நாம் பாதுகாப்பான நிலையில் உள்ளோம் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டால் பெரும் நெருக்கடிகளை சகலரும் எதிர்கொள்ள நேரிடும்.

ஒரு நாளைக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக மாத்திரம் 800 லட்சம் ரூபா செலவாகின்றது. ஏனைய சகல சுகாதார செயற்பாடுகளுக்கும் கோடிக்கணக்கான பணம் செலவாகின்றது. எனவே நாட்டின் சுகாதாரம் அவசியம். ஆனால் அதைவிடவும் நாட்டின் பொருளாதாரத்தையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

எனவே நாட்டை முடக்குவது என்பது முழுமையான முடக்கமாக இருக்கக் கூடாது. தொற்றாளர்களை மாத்திரம் வீடுகளில் முடக்கிவிட்டு சாதாரண நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டும் - என்றார். (எ-4)



## பொல்வத்த கடற்கரையில் கரையொதுங்கும் ஆமைகள்

கொழும்பு, ஜூன் 4

கொழும்புக்கு அருகிலுள்ள மொரட்டுவ உயன பொல்வத்த கடற்கரையில், நூற்றுக் கணக்கான ஆமைகள் நேற்றுக் காலை இறந்த நிலையில் கரையொதுகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சில ஆமைகளின் உடல்களில் காயங்கள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பிடித்து மூழ்கிக் கொண்டிருப்பதால், ஆமைகள் இறந்து கரையொதுங்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

## பாதுகாப்புச் செயலாளரை சந்தித்தார் ரஷ்யத் தூதுவர்

கொழும்பு, ஜூன் 4

இலங்கைக்கான ரஷ்யத் தூதரகத்தின் தூதுவர் யூரி மடேரி, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்னவை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில், இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பல கலந்துரையாடப்பட்டன.

கொரோனாத் தொற்றை இராஜதந்திர ரீதியில் எதிர்கொள்ளும் பொதுவான சிரமங்கள், அதனை வெற்றிகொள்வதற்கு சாத்தியமான தீர்வுகளைக் காண்பதன் அவசியம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் வலியுறுத்தினார்.

ரஷ்யாவால் இலங்கைக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கும் பாதுகாப்புச் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பாளர் பிரிகேடியர் தினேஷ் நாணயக்கார, இலங்கைக்கான ரஷ்யத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் டெனிஸ் ஐ ஸ்கோடா ஆகியோரும் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)



## நாமல் ராஜபக்சவுக்கு மற்றுமொரு பதவி

கொழும்பு.ஜூன் 4

டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக, நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் அவர் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

நாமல் ராஜபக்ச ஏற்கனவே இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகவும் பதவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## சட்டமா அதிபரால் முக்கிய பதவி நீக்கம்

கொழும்பு, ஜூன் 4

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சட்டமா அதிபருக்கான ஒருங்கிணைப்பு அதிகாரி பதவி நீக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் செத்திய குணசேகர தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்தின் அதிரடி நடவடிக்கையாக, ஒருங்கிணைப்பு அதிகாரி என்ற பதவி நீக்கப்பட்டுள்ளது.

முன்னைய சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக நிஷாரா ஜயரத்ன கடமையாற்றினார். தப்புல டி லிவேரா ஓய்வுபெற்றவுடன், நிஷாரா ஜயரத்ன, கடந்த மே மாதம் 24 ஆம் திகதியன்று தனது கடமைகளிலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

# போக்குவரத்துச் சேவைகள் அடுத்த வாரம் வழமைக்கு?

கொழும்பு, ஜூன் 4

சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைவாக பொதுப் போக்குவரத்துச் சேவைகளை மீள ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றால் நாடு தழுவிய ரீதியில் பயணத்தடை நடைமுறையில் உள்ளது. எதிர்வரும் வாரம் முதல் பல அத்தியாவசிய சேவைகளை சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைய மீள ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளில் சமூக இடைவெளியை முறையாகக் கடைப்பிடிப்பது பெரும் சிக்கலாகவுள்ளது.

பயணத்தடை தளர்த்தப்பட்டதன் பின்னர் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் செயற்படுத்தப்படும்.

அரச மற்றும் தனியார் சேவையாளர்கள் கடமைக்கு வருகைதரும் நேரத்தை மாற்றியமைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒரு சேவையாளர் ஒரு வாரத்தில் குறைந்தளவு நாள்களில் சேவைக்கு வருகைதரும் செயற்றிட்டம் மீண்டும் செயற்படுத்தப்படும். அரச மற்றும் தனியார் பஸ்களில் பயணிகள் ஆசன எண்ணிக்கைக்கு அமைவாகவே பயணம் செய்ய முடியும். அத்துடன் அலுவலக ரயில் சேவைகளை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழலில் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட



வேண்டும். தேவையற்ற பயணங்களை முடிந்தளவுக்குக் குறைத்துக்கொள்வது அவசியமாகும் - என்றார். (எ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.